# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 6
1983 ஆனி
விலை ரூபா 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு
# இராணுவ நடவடிக்கை அல்ல
# அரசியல் தீர்வு வேண்டும்!

யாழ்ப்பாணம் மீண்டும் ஒருமுறை அரச பயங்கரவாதத்தின் தீவைப்புக்கும் கொள்ளையடித்தலுக்கும், தாக்குதல்களுக்கும் இலக்காகி உள்ளது. யூ. என். பி. பதவிக்கு வந்த பின் நான்காவது தடவையாக நடைபெற்றுள்ள இக்கோரத்தனத்திற்கு கந்தர்மடம் பகுதியில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளும், உடமைகளும் இரையாகி உள்ளன.

கடந்த மாதம் தென் இலங்கையில் இடம் பெற்ற பதினெட்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பிரசாரத்தின் போது வடக்கில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட தமக்கு வாக்களிக்கும்படி யூ. என். பி மக்களிடம் கேட்டது. அப்பிரசாரத்தின் போது பொறுப்புள்ள தலைவர்கள் எனப் படுபவர்கள் கக்கிய இனவாதப் பேச்சுக்களின் எதிரொலிதான் யாழ்ப்பாணம் மீண்டும் சுட்டெரிக்கப்பட்டதற்கான காரணம் என்று மக்கள் பேசிக் கொள்வதில் உண்மை இருக்கவே செய்கின்றது.

### அரசு - கூட்டணி பேச்சுவார்த்தை அர்த்தமற்றது
### சகல கட்சிகளும் அரசியல் தீர்வுக்கு முயலவேண்டும்!

வடக்கில் பயங்கரவாதச் சம்பவங்கள் என்று வர்ணிக்கப்படும் விடயங்கள் சரியானவையா அன்றித் தவறானவையா என்பது இரண்டாம் பட்சமான பிரச்சனையேயாகும். முதலாவதாக விவாதித்து தீர்க்கப்பட வேண்டியது என்னவெனில் அச்சம்பவங்கள் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள அடிப்படைப்பிரச்சினைகளேயாகும். வடக்கில் பயங்கரவாதச் சம்பவங்கள் என்று கூறப்படுபவை நம்நாட்டு இனப்பிரச்சினையோடு சம்பந்தமுடையவையாகும். இனப்பிரச்சினை இந்நாட்டு பொருளாதார அரசியல் பிரச்சினைகளோடு சம்பந்தமுடையது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று சம்பந்தமுடையனவையாகவே பயங்கரவாதம் என்று கூறப்படுபவற்றை தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டுமே அன்றி தனியானதொன்றாக அதை நோக்கமுடியாது.

இவ்வாறு நமது நாட்டின் பொருளாதார அரசியல், இன பிரச்சினைகளுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒரு பிரச்சினையைத் தனியே இராணுவ நடவடிக்கைகளாலும், அடக்குமுறைச் சட்டங்களாலும், திட்டமிட்ட அரச பயங்கரவாதத்தாலும் ஒழித்து விடலாம் என உரத்துக் கூறுவது அர்த்தமற்ற அறியாமையாகவோ அன்றிப் புரியாமையாகவோ மட்டும் இருக்கமுடியாது. இது தமது மோசமான பொருளாதார அரசியல் பங்கலோட்டுத்தனத்தை பொது மக்களிடம் இருந்து மறைப்பதற்கான திட்டமிட்ட ஒரு நடவடிக்கையுமாகும்.

அடக்குமுறைகளும் அரச பயங்கரவாதமும் பாதிக்கப்படும் ஒரு இனத்தின் அல்லது மக்கள்பிரிவின் பிரச்சினைகளை தீர்க்க உதவப்போவதில்லை. இப்போது உள்ள படைப் பிரிவுகளுக்குப் பதிலாக மற்றொரு படைப் பிரிவு வடக்கே அனுப்பப்படுவதால் பயங்கரவாதம் எனப்படுவதை ஒழிக்கவும் முடியாது. அல்லது மனித வதைக்குப் பெயர் பெற்ற அமெரிக்க இராணுவப் படைப்பிரிவின் ஒருபகுதியை வடக்கே அனுப்பி அடக்குமுறைகளை நடைமுறைப்படுத்தினாலுங் கூட பிரச்சினைகளைத் தீர்க்கமுடி

(8ம் பக்கம் பார்க்க)

# பேராதனையில் நடந்ததென்ன?

1983 மே 11 புதன் கிழமை காலை விஷமிகள் சிலர் பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்த பெயர்ப்பலகையில் சிங்கள எழுத்துக்களை அழித்தனர். அன்றிரவு பல விடுதிகளிலும் இருந்த தமிழ் மாணவர்கள் 100-200 பேரைக் கொண்ட கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டனர். அன்று இரவும் அடுத்தநாள் பகலும் வளாகத்தை விட்டு வெளியேறுமாறு தமிழ் மாணவர் மிரட்டப்பட்டனர். வியாழன் விடியலிலேயே பெரும்பாலான தமிழ் மாணவர்கள் வெளியேறிவிட்டனர். ஒரு அப்பாவித் தமிழ் மாணவன் இரண்டு பிரிவினைவாத துண்டுப் பிரசுரங்களையும், தான் ஆசிரியர்களுள் ஒருவராயுள்ள ஒரு இலக்கிய சஞ்சிகையின் கடைசி இதழின் சில பிரதிகளையும் பத்திரிகை சம்பந்தமான சில இரப்பர் முத்திரைகளையும் அறையில் வைத்திருந்த குற்றத்திற்காக கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவரை புதன் நள்ளிரவில் பொலிசாரிடம் ஒப்படைக்குமாறு நிர்வாகிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். எந்திரவியற் பீடச் சிங்கள மாணவர் சிலரதும் ஒரிரு விரிவுரையாளர்களதும் குறுக்கீட்டால் இது தடுக்கப்பட்டு காலைவரை அம்மாணவரை பல்கலைக்களகத்தின் எல்லைக்குள் காவலில் வைக்க முடிந்தது. காலையில் பல்கலைக்கழக நிர்வாகம் அவரை முறையாக விசாரிக்கு முன்னமே பொலிசார் வளாகத்துள்வந்து அவரைப் பிடித்துச் சென்றனர். அவரைப் பொலிசார் வதைக்காதவாறு நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டன. சி. ஐ. டி. விசாரணைக்குப் பின் அவருக்கு என்ன நடக்குமென்பது யாருக்கும் தெரியாது. அம்மாணவர் 'தீவிரவாதி' என்று கருத எதுவித ஆதாரமும் இல்லை. அவர் வசமிருந்த பொருட்கள் எவ்வகையிலும் அவரை மறியல் வைக்க போதிய நியாயமளிப்பனவும் அல்ல.

வியாழன் மாலை எஞ்சிய தமிழ் மாணவர்கள் மீதும் மூன்று துணைவிரிவுரையாளர் மீதும் தாக்குதல் நடந்தது. முதல் நாள் தாக்குதலைத் தடுத்த சில மருத்துவ பீட சிங்கள மாணவர்களும் சில சிங்கள துணைவிரிவுரையாளர்களும் நிந்திக்கப்பட்டனர்.

வெள்ளி மாலை, வெளியேறிய மாணவர்களின் பெட்டிகளைப் பொறுப்பேற்ற குற்றத்துக்காக ஒரு விடுதிச் சிற்றுண்டிச்சாலையின் உடைமையாளர் தாக்கப்பட்டார். உடமைகள் நாசப்படுத்தப்

(8-ம் பக்கம் பார்க்க)

# கந்தர்மடம் அட்டூழியத்திற்கு எமது கண்டனம்

கடந்த மே மாதம் 18ம் திகதி யாழ்-மாநகராட்சி மன்றத்திற்கான தேர்தல் இடம் பெற்றதினத்தன்று கந்தர் மடம் வாக்களிப்பு நிலையத்தில் பி. ப. நான்கு மணியளவில் துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் சிலருக்கும் கடமையில் இருந்த ராணுவ, பொலீஸ் படையினருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. இதில் ஒரு ராணுவ வீரர் கொல்லப்பட்டார். மற்றிருவர் காயமடைந்தனர். இச் சம்பவத்திற்கும் பொதுமக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. இது முற்றிலும் காவல்படையினருக்கும் இளைஞர்கள் சிலருக்குமிடையிலான பிரச்சினையேயாகும்.

அப்படி இருக்க அப்பகுதியில் அன்று மாலை ராணுவ அட்டூழியங்கள் பகிரங்கமாகவே மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. வீடுகள் வேலிகள். வாகனங்கள், உடுபுடைவைகள், உணவுப்பாத்திரங்கள், தளபாடங்கள், ஏனைய பாவனைப் பொருட்கள் யாவும் ராணுவத் தீமூட்டலுக்கு இரையாகின. கோவில், பொது இடங்கள் கூடத்தப்பவில்லை. இவ்வெறியாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அப்பகுதியை விட்டு மக்கள் வெளியேறி இருந்தபடியால் அங்கு உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. இருந்தபோதிலும் சிலர் தாக்குதல்களுக்கு ஆளாகினர். அப்பகுதி மக்கள் இரண்டு மணித்தியாலங்களில் அகதிகளாக்கப்பட்டனர். அயற் கிராம மக்களும், பல்கலைக்கழக மாணவர்களும், ஏனைய பொது ஸ்தாபனங்களும் இம் மக்களுக்கு தஞ்சமளித்தனர். கிட்டத்தட்ட ஐந்து கோடி ரூபாய்க்குமேல் அப்பகுதி மக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தீக்கிரையாக்கப்

(8ம் பக்கம் பார்க்க)

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

✕ அவதானி ✕

## இடைத் தேர்தல் நாடகம்

பாணந்துறையில் இடைத்தேர்தல் நடக்காமல் தவிர்த்து விட்டார்கள். மட்டக்களப்பு, கல்குடா தொகுதிகளிலும் கூட இடைத் தேர்தல் இல்லை. பொறுக்கி யெடுத்து 18 தொகுதிகளில் நடந்த இடைத்தேர்தல்கள் உலகத்தைஏமாற்றவே! ஏறத்தாழ இறந்துபோன பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு உயிர் இருக்கிறது என்று காட்டுவதற்காக! இறந்த நாயை நிறுத்திவைத்து அதன் வாலை கையால் பிடித்து ஆட்டிக்கொண்டு 'லொள் லொள்' என்று கத்தி நாய்க்கு உயிர் இருப்பதாகக் காட்ட முனையும் ஏமாற்றுக் காரனைப் போல அரசாங்கம் நடந்து கொள்கிறது. இந்தஏமாற்றை ஒருசிலர் நம்பலாம். ஆனால் நாயின் பிணம் நாற்றமெடுக்கும்போது பன்னீர் ஊற்றினாலும் கூடஅதன் மரணத்தை மறைத்துவிட முடியாது.

இடைத் தேர்தல்களில் யூ. என். பிக்கு எதிராக மக்கள் வாக்களித்துள்ளனர்; இருந்தும் யூ. என். பி. வெற்றி பெற்றுள்ளது. இது நாட்டின் அரசியலிலோ அரசாங்கப் போக்கிலோ குறிப்பிடத்தக்க மாற்றம் எதையுமே ஏற்படுத்தமாட்டாது என்பதையும் வலியுறுத்தியே ஆகவேண்டும்.

தேர்தல்கள் நேர்மையாக நடந்தனா என்பது வேறொரு விஷயம். சென்ற ஆண்டின் அனுபவங்கள் அதிகம் நம்பிக்கைக்கு இடமளிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் கொடிகட்டிப்பறந்த ஜே. வி. பி. தலைமை சர்வசன வாக்கெடுப்பில் ஒதுங்கி இப்போது தம் யூ. என். பி. எஜமானர்கட்கு மறுபடியும் சேவை செய்துள்ளது கவனிக்க வேண்டிய ஒரு சின்னவிஷயம்.

★

## சுழல் துப்பாக்கியும் வேட்பாளர்களும்

வடபிரதேச யூ என். பி. வேட்பாளர்கட்கு சுழற் துப்பாக்கிகள் வழங்கப்படும் என்ற பத்திரிகைத் தலைப்பு அதிசயமாக இருக்கவில்லை. ஆனாலும் சுழல்துப்பாக்கி கொடுத்தால் போதுமா? பயன்படுத்தப் பயிற்சியும் வேண்டாமா? அதற்கெல்லாம் அவகாசம் போதாவிட்டால் துப்பாக்கி பயன்படுத்தத் தெரிந்தவர்களை மட்டுமே யூ. என். பி வேட்பாளராக நியமனம் செய்யலாம். யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ், ராணுவ சேவையாளர் யாரையாவது தேர்தலில் நிறுத்தவா முடியாது? உண்மையில் யூ. என். பி. யின் அடக்குமுறைக் கொள்கையை வடக்கில் நடைமுறைப்படுத்துபவர்கள் அவர்கள்தானே! கொள்கைக்குக் கொள்கையுமாயிற்று தற்பாதுகாப்புக்குப் தற்பாதுகாப்புமாயிற்று!

அது போக, கூட்டணியின் பாதுகாப்புக்கு என்ன செய்வது? வட-கிழ் பிரதேச யூ. என். பியின் மறைமுகமான பிரதிநிதி த. வி. கூட்டணி என்பது இப்போது பரகசியமான விஷயமாயிற்றே. ஓகோ! அவர்கள் தான் சேர-சோழ-பாண்டிய மரபின் ஆண்டபரம்பரையின் அடிவருடிப்பிழைத்த பரம்பரையாயிற்றே! அவர்களுக்கு ஈட்டி, வாள், கேடயம் தான் பொருத்தம் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் அதற்கு ஏற்ப பல்லாக்குகளும் மரத்தேர்களும் அல்லவா கொடுத்திருக்கவேண்டும். ஜீப்களும் மோட்டார் கார்களும் எதற்கு?

★

## மைத்திரியின் மனமாற்றம்!

மைத்திரிபால சேனநாயக்காவும் அவரது ஆதரவாளர்களும் ஸ்ரீ. ல. சு. க. யை பிளவுபடுத்திப் பலவீனப் படுத்துவதில் யூ. என். பி. யால் மிகவும் குரூரமான முறையில் பயன படுத்தப் பட்டபின்பு, பிழிந்தெடுத்த கரும்பின் சக்கைபோல் கழித்து எறியப்பட்டுள்ளனர் சர்வசன வாக்கெடுப்பின் போது இவர்களது ஆதரவைப் பயன்படுத்திய யூ. என் பி. தன் தேவை நிறைவேறியதும் இவர்களை உதாசீனப் படுத்திவிட்டது. இப்போதாவது தம் பிழைகளை இவர்கள் உணர்ந்து யூ. என். பி. யை எதிர்க்க முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கதே. ஆயினும் இவர்கட்குநடந்த 'மரியாதை' பிற்போக்குக்குச் சேவையாற்றும் மற்றவர்கட்கும் ஒரு பாடமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியும் அல்லவா?

★

## திருமலையில் குடும்ப அரசியல்

திருகோணமலை நகராட்சித் தேர்தலில் த. வி, கூ. குழுவின் தலைவராகப் போட்டியிட்டு. வெற்றி பெற்றவர் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரர். முன்பு தமிழின் பேராலும் தமிழன் பேராலும் நகராட்சிமன்றத் தேர்தலில் வென்ற கூட்டணியினரின் நிர்வாகத்தில் திருகோணமலை வீதிகள்நாற்றமெடுக்கின்றன. நகராட்சிசபைத் தலைவி ஜே. ஆருக்கு வரவேற்பளித்ததையடுத்து மக்கள் மத்தியில் கணிசமான அதிருப்தி ஏற்பட்டது. அவரும் சமயோசிதமாக ஊராட்சி அரசியலினின்றும் ஒதுங்கிவிட்டார். இப்போது கூட்டணிக்குள் ஜே. ஆரின் பிரதான விசிறிகளில் ஒருவரான சப்பந்தனின் சகோதரர் வந்துள்ளது தளர்பதி தம்பதிகளுக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான். திருகோணமலை மக்களுக்கு? அதைப்பற்றிக் கூட்டணிக்கு என்ன கவலை!

★

## சத்தியச் சுடர்கள்

'சுடர்' மாசி—பங்குனி இதழில்—குமார் பொன்னம்பலம் எழுதிய ஒரு கடிதமும் அதற்கு ஆசிரியர் பதிலும் வந்திருந்தன. கு.பொ., திரு. சந்திரகாசன் ஜனாதிபதித் தேர்தல், சர்வசன வாக்கெடுப்பு போன்ற சந்தர்ப்பங்களில் நடத்துகொண்ட நேர்மையற்ற முறை பற்றியும், கூட்டணிக்கும் சந்திரகாசனுக்கும் இடையிலுள்ள மோதல் வட்டுக்கோட்டை எம். பி, பதவி காலியான போது கொஞ்சம் தணிந்த விஷயம் பற்றியும் நேரடியான கேள்விகளை எழுப்பியிருந்தார். இக்கேள்விகட்குப் பதிலளிப்பதற்கு மாருக கு. பொ. வின் அரசியல் தகுதிகளை சுடர் ஆசிரியர் தாக்கி அவருக்கு சந்திரகாசனை விமர்சிக்க ஒரு அருகதையும் இல்லை என்று முடித்திருந்தார்.

கு. பொ. பற்றி தமிழர் கட்குப் பிரமைகள் இல்லை. அவரது அரசியல் தகுதியின்மை அவரது நியாயமான கேள்விகட்கு பதிலளிக்காதமையை நியாயப் படுத்தவில்லை. சுடர் கு. பொ. மீது குற்றப்பத்திரிகை வாசிப்பது பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சந்திரகாசனின் நடத்தையை விளக்கும் பொறுப்பு சந்திரகாசனுக்கும் அவரைச் சுற்றியுள்ள கூட்டத்துக்கும் உள்ளது.

சர்வசன வாக்கெடுப்பில் தமிழர்களால் தம் முகத்தில் கரி பூசப்பெற்ற இவர்கள் அதுபற்றிய தம தவறான அரசியல் முடிவை விமர்சிக்கத் தைரியம் இல்லாதவர்கள். அமிரின் கோஷ்டி 1970—77 கால இடைவெளியில் நடந்து கொண்ட விதமும் சந்திரகாசன் கோஷ்டி இன்று நடக்கும் விதமும் பல வகைகளில் ஒற்றுமையாகவே உள்ளன.

★

## தமிழ்-முஸ்லீம் மோதல்

யாழ்ப்பாண தமிழ்-முஸ்லீம் மோதல் பற்றி மகிழ்ச்சி அடைபவர்களும் இருக்கிறார்கள். சாதி அடிப்படையில மோதல்களைத் தூண்டிவிடும் உயர் சாதிப் பிற்போக்குவாதிகளும் வர்க்கப் போராட்டத்தை வெறும் சாதிப்போராட்டமாக்கி லாபம்தேடும் கூட்டத்தினரும் இருப்பதை நாம் அறிவோம். நமமளவில் சாதி, மத, இன, மொழி அடிப்படையில் மக்களிடையே முரண்பாடுகளை வளர்க்கும் அனைவரும் கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டியவர்கள். இத்தகைய பிற்போக்குவாதிகளே இன்று பாராளுமன்ற அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவர்களை முறியடிக்கும் தகுதியும் தேவையும் பாட்டாளிவர்க்கத்துக்கு உண்டு. தமிழ்-முஸ்லீம் மோதலின் போது அதை வளராமல் தடுத்தலில் மக்களால் காட்டப்பட்ட நிதானம் அகில இலங்கை ரீதியாக சகல இன உறவுகளிலும் காட்டப் பட்டால் பிற்போக்குச் சக்திகள் நிச்சயம் முறியடிக்கப்படும். ஒற்றுமை என்பது முதலில் வர்க்க அடிப்படையிலானது என்பதை நாம் தெளிவாக உணர்ந்தால் பிற்போக்கு வாதிகளைத் தனிமைப் படுத்தும் காரியம் எளிதாகி விடும்,

★

## இந்தியாவில் இனக்கலவரம்

இன்றைய இந்தியாவில் இந்து-முஸ்லீம், இந்து-கிறிஸ்தவ, ஜாதி இந்து-ஹரிஜன், கிராமிய மக்கள்-மலைவாசிகள் என்று பல்வேறு அடிப்படைகளில் இன்று மோதல்கள் நிகழ்கின்றன. சாதிகள் இல்லை என்று பேசிக்கொண்டே மதவடிவத்தில் சாதிப் போராட்டங்களை நடத்தும் காரியமும் அங்கு நடக்கிறது. முஸ்லீம்களை வட இந்தியாவில் பகடைக்காய்களாக்கி அங்கு கட்சி அரசியல நடக்கிறது. இன்று இந்துமதத்தினதும் பாரததேசத்தினதும் பெயரில் விஸ்வ ஹிந்து பரிஷத், ஆர். எஸ். எஸ். போன்ற விஷ விருட்சங்கள் முழுநாட்டிலும் வேரூன்றி விட்டன. இந்து மதத்தினதும் கலாசாரத்தினதும் மேன்மையை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு சிறுபான்மையினர்மீது தாக்குதல் தொடுக்கும் விஷமிகள் பரவிவருகிறார்கள். வடக்குடன் ஒப்பிடுகையில் ஓரளவு நிதானமான நிலையில் இருந்துவந்த தென்மாநிலங்களில் இன்று மதவெறி தலைவிரித்தாடுகிறது. இந்து மதத்தில் இல்லாதனவும் இருப்பனவற்றில் தள்ளத்தக்கனவுமான சீரழிவுகளை எல்லாம் இவர்கள் ஊக்குவித்து வருகிறார்கள். இந்திய பாராளுமன்ற அரசியற் கட்சிகளின் சந்தர்ப்பவாதமும் இவர்கட்கு வசதியாக அமைந்து விடுகிறது.

★

## வியற்நாமின் சமாதானம்

வியற்நாமிய அரசாங்கம் தன் துருப்புக்களில் ஒரு பகுதியை கம்பூச்சியாவிலிருந்து வெளியேற்றுவதாகச் சொல்லும் ஒவ்வொரு தடவையும் கம்பூச்சிய விடுதலைப் படைகள்மீது பயங்கரமான ஆயுதத்தாக்குதல்கள் நடக்கும். துருப்புக்கள் ஒவ்வொரு தடவையும் வியற்நாம் அரசாங்கம் சொல்லும் அளவில் வெளியேறி இருந்தால் இன்று கம்பூச்சியாவில் வியற்நாமியர்கள் யாருமே இருக்க முடியாது. (அமெரிக்கத்துருப்புக்களும் முன்பு இப்படித் தான் வியற்நாமிலிருந்து வெளியேறினார்கள்).

வியற்நாம் அரசு சமாதானம் பேசும் ஒவ்வொரு தடவையும் ஏதாவது முக்கிய சர்வதேச நிகழ்ச்சி இருக்கும். அங்கே கவனத்தைத் திசை திருப்ப சமாதான ரெக்கோட்டைத் திரும்பத் திரும்பப் போடுவார்கள். பிறகு மறந்துவிடுவார்கள். ஐ. நா. பொதுச்சபைக்கூட்டம், அணிசேரா மாநாடு இப்படி ஏதாவது நடக்கிறது என்றால் வித்தைக்காரன் மாதிரி வியற்நாம் பிரதிநிதி கவனத்தை முக்கிய பிரச்சினையிலிருந்து திசை திருப்ப மிகவும் சிரமப்படுவர். இப்போது இதையெல்லாம் நம்ப ஆள் இல்லாமல் போய் விட்டது. எனவே 'சீன அபாயம்' என்று இடைக்கிடை அலறுவார்கள். அதையும் நம்ப இப்போது ஆள் இல்லாமல் போகவே, சீன அபாயத்தை நிஜமாக்கத் தாங்களே இவ்வருடம் சீன எல்லையில் ஆயுதந்தாங்கிய அத்துமீறல்களை நடத்தினார்கள். பல எச்சரிக்கைகளின் பின், வேறு வழியின்றி சீனா எதிரடி கொடுத்துள்ளது. 'ஐயோ அடிக்கிறார்களே' என்று இப்போது அலறுகிறார்கள். இதெல்லாமே அவர்களது ஆக்கிரமிப்பை மூடி மறைக்கும்வேலைகள்தான் என்பதை உலகம் உணர்ந்து விட்டதை வியற்நாம் அரசு உணர்ந்ததாகத் தெரியவில்லை. அதன் சோவியத் எஜமானர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

★

அடுத்த இதழில் வெளிவருகிறது!

**தேசபக்தன் எழுதும்**

**மாக்சிசமும் அதன் எதிரிகளும்**

# யூ.என்.பி.யின் தேர்தல் வெற்றி!

அண்மையில் இடம் பெற்ற பதினெட்டு தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் யூ. என். பிக்கு 'அமோக வெற்றி' கிடைத்துள்ளதாக அரசாங்க தொடர்பு சாதனங்களும் ஆட்சியின் தலைவர்களும் பிரசாரம் செய்து வருகின்றனர். கடந்த சர்வசனவாக்கெடுப்பின்போது தோல்வியடைந்த வேறும் பல தொகுதிகளுக்கு தேர்தல் நடத்துவதை தவிர்த்து பதினெட்டுத் தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் நடத்தினார்கள். இதன் மூலம் ஜே. ஆரின் ஜனநாயக முகமூடியை பாதுகாப்பதே நோக்கமாகும்.

இடைத் தேர்தல்களில், அமோகவெற்றி என்று கூறப்படுவது எவ்வாறு பெறப்பட்டது என்பது மக்களைப் பொறுத்தவரை பகிரங்க இரகசியமாகும். 1981ல் நடைபெற்ற யாழ்-மாவட்ட சபைத்தேர்தலிலும், கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், சர்வசன வாக்கெடுப்பிலும் மக்களின் வாக்களிக்கும் சுதந்திரம் அடைந்த கேவலத்தை நாடு விரைவில் மறந்துவிடவில்லை.

இவ் இடைத்தேர்தல்களிலும் ஆயுதப்படைகளின் ஆதரவு பெற்ற அரச காடைத்தனம், பயமுறுத்தல், கள்ள வாக்கு, ஆள்மாறாட்டம் போன்றன போதியளவுக்கு அரசுசார்பாகப் பாவிக்கப்பட்டுள்ளதைச் செய்திகள் புலப்படுத்துகின்றன. இவை பற்றிய புகார்களும் விசாரணைகளும் அர்த்தமற்ற கண்துடைப்புக்களாக மட்டுமே உள்ளன. இது தற்செயலான தொன்று அல்ல.

இதுவரை போற்றிப் புகழப்பட்டுவந்த முதலாளித்துவ பாராளுமன்ற தேர்தல் நடைமுறையின் மூலம் மீண்டும் பிரதான எதிர்க்கட்சியை பதவிக்கு வரவிடாது எவை எவை செய்யப்படவேண்டுமோ அவை அத்தனையும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டதுடன் பாராளுமன்ற ஜனநாயகத்தை யூ. என். பியும்-ஜே. ஆரும் புதைகுழிக்கு அனுப்பி விட்டார்கள். இன்றைய தனிக்கட்சி, தனிநபர் சர்வாதிகாரத்தின் கீழ் எப்படி தேர்தல் நடைபெற வேண்டுமோ அப்படியே நடைபெற்றுள்ளது.

இவ்வளவிற்கு மத்தியிலும் மக்கள் இவ் இடைத் தேர்தல்களில் யூ. என். பிக்கு எதிராகத் துணிந்து வாக்களித்துள்ளார்கள் என்பதே பிரதானமாகக் கொள்ள வேண்டியதொன்றாகும். ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல், சர்வசனவாக்கெடுப்பு போன்றவற்றில் யூ. என். பி யின் வெற்றி மிகமிக சொற்ப வீதமேயாகும். அதே போல் இவ் இடைத்தேர்தல்களிலும் ஆசனங்கள் யூ. என். பிக்கு கூடுதலாகக் கிடைத்த போதிலும் வாக்குகளின் எண்ணிக்கையை அவதானித்தால் யூ. என். பிக்கு கிடைத்த வாக்குகளைவிட 9.894 அதிகப்படியான வாக்குகளை எதிர் அபேட்சகர்கள் மொத்தமாக பெற்றுள்ளனர். இதுவளர்ந்து வரும் யூ. என். பி எதிர்ப்பையும் வெறுப்புணர்வையுமே எடுத்துக் காட்டுகின்றது.

நாம் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறி வருவது போல் ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் மனப்பூர்வமான யூ. என். பி. எதிர்ப்பு நிலைப்பாட்டில் எதிர்க்கட்சிகள் போட்டியிட்டிருந்தால் அரைவாசிக்கு மேற்பட்ட ஆசனங்களை எதிரணிக் கட்சிகளால் கைப்பற்றி இருக்கமுடியும். எதிரணிக் கட்சிகள் ஆசனங்களை முதன்மைப் படுத்தி தத்தமது கட்சிச் செல்வாக்கைப் பற்றி சிந்தித்தார்களே அன்றி மக்களுக்கு இருக்கும் யூ. என். பி எதிர்ப்பு அபிலாஷையை ஒருமுகப் படுத்தி முன்னெடுக்க இவ் இடைத் தேர்தலை ஒரு சந்தர்ப்பமாகப் பாவிக்கவேண்டும் என்பதை எதிரணிக்கட்சிகள் உணர்ந்து கொள்ளவில்லை.

எல்லாம் முதலாளித்துவத் தேர்தலே என்றும் இதில் எமக்கு அக்கறை இல்லை என்றும் வறட்டு வேதாந்தம் பேசக் கூடிய காலகட்டம் இதுவல்ல. வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் யூ. என். பிக்கு எதிராக மக்களை ஒன்று படுத்தி நம்பிக்கை கொடுத்து முன்செல்லவேண்டிய தருணம் இதுவாகும். யூ.என்.பிக்கெதிராக வாக்களிப்பதென்பதே இன்று வாழ்வா சாவா என்ற நிலையை சில தொகுதிகளில் மக்கள் எதிர்நோக்க வேண்டிய அளவுக்கு அரச காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. இக் காடைத்தனத்துக்கு அஞ்சி ஒருவர்வாக்களிக்க முன்வராதுவிட்டால் அதற்கு அப்பால் நடைபெறும் வேறு போராட்டங்களில் அவரால் பங்கு கொள்ள முடியாது எனவே தேர்தல் முனையும் ஒருவகையில் யூ. என். பி எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு அம்சமாக இருக்கமுடியும். ஆனால் இறுதியான; தீர்க்கமான ஒரு வழியாக அதைக் கொள்ளமுடியாது என்பது நமக்கு தெளிவானதொன்றேயாகும்.

பல குறுக்கு வழிகளையும், பகிரங்க காடைத்தனங்களையும் கையாண்டு இடைத் தேர்தலில் அரசு வெற்றி பெற்றுள்ளது. இவ் வெற்றிக்கு யூ. என். பியின் செல்வப்பிள்ளையான விஜய வீராவும்-ஜே. வி. பியும்தமது பங்களிப்பை வழங்கி உள்ளனர். களுத்துறையில் யூ. என். பி வெற்றிக்கு கொல்வின் தலைமையிலான சமசமாஜக் கட்சி தனது பங்கை செலுத்தியுள்ளது.

யூ. என். பி யின் கீழ் குறைந்த பட்ச முதலாளித்துவ பாராளுமன்ற நேர்மையைக்கூட எதிரணிக் கட்சிகள் இனிமேல் எதிர்பார்க்க முடியாது என்பதை இவ் இடைத் தேர்தல் நடைமுறைகள் மீண்டும் நிரூபித்துள்ளன. ஆதலால் மக்களின் பரந்துபட்ட அபிலாஷைகளுக்கு ஏற்ப யூ. என். பியை தேர்தல்களில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் தோற்கடிப்பதற்கு சக்தி மிக்க யூ. என். பி எதிர்ப்பு இயக்கத்தை பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் முன்னெடுக்க சகல முயற்சிகளையும் எதிரணி சக்திகள் எடுக்கவேண்டும். அதையே அண்மையில் நடந்துமுடிந்த இடைத்தேர்தல் முடிவுகள் வலியுறுத்துகின்றன.

நமது நிருபர்

## இரு தலைவர்களின் மேதினப் பேச்சு!

உலகத்தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்ட தினம் மேதினம். மலையகத்தில் நடைபெற்ற இ. தொ. கா. வின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் தொண்டமான் அங்கு ஓர் உயர்ந்த பட்சக் கோரிக்கையை முன்வைத்தார். அது என்ன தெரியுமா? "கொட்டகலையை மலையகத்தின் தலைநகராக்குவோம்" என்பது தான்; கூழுக்கு உப்புவேண்டும் என்பது பலரது கோரிக்கை பாலுக்கு கற்கண்டு வேண்டும் என்பது சிலரது கோரிக்கை.

அன்று கொழும்பில் நடைபெற்ற யூ. என். பி. மேதினக் கூட்டத்தில் திரு. செல்லச்சாமி வாங்கு வாங்கு என்று விளாசித்தள்ளினார். தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி அல்ல ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனவை புகழ்ந்து புகழ்ந்து உரையாற்றினார். அவரது புகழ்ச்சிப்பேச்சால் கிறுகிறுத்துப்போன இராசாங்கஅமைச்சர் எழுந்து செல்லச்சாமியை கட்டித்தழுவி தனது சந்தோசத்தை தெரிவித்துக் கொண்டாராம். செல்லச்சாமிக்கு சொல்லவா வேண்டும்? ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு?

இந்த இரண்டு இ. தொ. கா. தலைவர்களும்தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடிவு காட்டப்போவதாக யார் யாரோ எல்லாம் பிதற்றுகிறார்கள்.

# அமெரிக்க ஆலோசனையுடன் ஆட்சி நடைபெறுகிறது!

இன்றைய அரசு வெளிநாட்டு உள்நாட்டு மூலதனத்தையும், அதன் உரிமையாளரான பெரும் முதலாளிகளையும் பாதுகாத்து வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அரசியல் ஆலோசனைகளுடனும் உதவியுடனும் நிறைவேற்றி வருகிறது, இத்தகைய நடவடிக்கைகளுக்கு நம் நாட்டு உழைக்கும் வர்க்கமும் ஏனைய வர்க்கப்பிரிவினரும் பலியாக்கப்பட்டு வருகின்றனர். ஆதலால் இந்த நாட்டின் எதிர்காலத்தின் மீதும் மக்கள் நலன்களின் மீதும் அக்கறை கொண்ட சகல சக்திகளும் யூ. என் பியை முறியடிக்க ஓரணிதிரள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அவசியத்தை உணர்ந்தே நாம் இன்று மேதினத்தை மூன்று கட்சிகளின் கூட்டுமேதினமாக நடத்துகின்றோம்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஆகியன சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடத்திய கூட்டு மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய தோழர் கே. செந்திவேல் கூறினார்.

## பரிசோதனைக் குழாயில் ரப்பர் மரவளர்ப்பு!

சீன விஞ்ஞானிகள் பரிசோதனைக் குழாயில் வளர்த்த ரப்பர் மரக்கன்றை வெற்றிகரமாக நிலத்தில் நட்டு வளர்ப்பதில் வெற்றி பெற்றுள்ளனர். இத் தகவலை அண்மையில் பெய்ஜிங்கில் நடைபெற்ற சர்வதேச ரப்பர் ஆராய்ச்சி மாநாட்டிற்கு சமர்ப்பித்த ஆராய்ச்சிக்கட்டுரையின் பேராசிரியை சென் ஷென்குவா தெரிவித்துள்ளார்.

1977ல் பரிசோதனைக் குழாயில் உருவாக்கப்பட்ட ரப்பர் மரக்கன்று 1979ல் ஹைனன் தீவில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் நாட்டப் பட்டது. தற்போது ஆறு மீற்றர் வரை வளர்ந்து விட்ட இம்மரத்தில் இருந்து அடுத்த வருடத்தில் பால் வெட்டி எடுக்கும் வேலை ஆரம்பமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான முறையில் விதையில் இருந்து ரப்பர் மரத்தை வளர்த்து முழுமையான பயனைப் பெற கிட்டத்தட்ட நூறு வருடங்களாவது செல்லும் புதிய பரிசோதனைக் குழாய் வளர்ப்பு முறையால் குறுகிய காலத்தில் நல்லரக கலப்பு மரங்களை உருவாக்கி பயன் பெற முடியும் என்ற நம்பிக்கையை சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆதாரம்: 'சின்குவா செய்தி.

## சுன்னாகம் கூட்டு மேதினத்தில் செந்தில்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் அமைப்புச் செயலாளர் தோழர் கே ஏ. சுப்பிரமணியம் இம் மேதினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் தோழர் செந்தில் தொடர்ந்து பேசுகையில்.

யூ. என். பி யின் சகல பொருளாதாரக் கொள்கைகளும் தோல்வியடைந்து விட்டன. தேசிய பொருளாதாரம் தேசிய கலாச்சாரம் போன்றன முற்றுமுழுதாக விதேசியமயமாக்கப் பட்டுள்ளது. மக்கள் மத்தியில் போலி ஆடம்பரத்தைப் பரப்பி ஒருவித மயக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதே தவிர மக்களின் வாழ்க்கை நிலை வெறும் கோது நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது. இந் நிலையை மக்கள் விரைவில் புரிந்து கொண்டு யூ. என். பிக்குஎதிராகப் போர்க்கொடி தூக்கும் நாள் அதிகதூரத்தில் இல்லை.

அவர் மேலும் பேசுகையில் யூ. என். பி அரசு பதவிக்கு வந்தபின் அடுத்தடுத்து வடபகுதியை அரச பயங்கரவாதத்தால் தீயிட்டு பொசுக்கியபோது ஏதோ வீரச்செயல் புரிந்ததாக இறுமாப்புக் கொண்டது. ஆனால் அத்தாக்கத்தின் விளைவை இன்று எதிர்கொள்ள முடியாது அரசு திண்டாடுகின்றது. எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் வெடிப்பது தவிர்க்க முடியாத நியதியே ஆனால் அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் சரியான பாதையில், உண்மையான மக்கள் விடுதலைப் பாதையில் முன்னேற வேண்டும் என்பதே பிரதானமாகும், அதையே எமது கட்சி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது. அரச பயங்கரவாதத்தால் சகலத்தையும் தீர்மானித்து விடலாம். என ஆட்சியினர் கனவு கண்டால் அதைவிட முட்டாள் தனம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

யூ. என். பி அரசின் பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கு தமிழர் கூட்டணியின் தலைவர்கள் நிபந்தனையற்ற ஆதரவைக் கொடுத்து வருகிறார்கள். அரசிற்கு அடிபணிந்தும், அவர்களை எதிர்க்கத் துணிவற்ற நிலையிலும் கூட்டணித் தலைவர்கள் இருப்பதால் தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்

1982 செப்டம்பரில் நிகழ்ந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது தேசிய மாநாடு அதன் புதிய யாப்பை அங்கீகரித்தது. அதில், ''சீன கம்யூனிஸ்ட் கட்சி இதர நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், தொழிலாளி வர்க்கக் கட்சிகளுடனான உறவுகளை மார்க்ஸிஸத்தின் அடிப்படையிலும், சுதந்திரம், பூரண சமத்துவம், பரஸ்பர மதிப்பு, ஒன்றின் உள்விவகாரங்களில் மற்றது தலையிடாமை என்ற கோட்பாடுகளின் அடிப்படையிலும் வளர்க்கின்றது'' என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தோழர் ஹூ யா பாங் அவர்கள் அம் மாநாட்டுக்கு சமர்ப்பித்த அறிக்கையிலும் இந்த மார்க்ஸிஸ கோட்பாடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

மார்க்ஸிஸம் மனித சமுதாயத்தின் வரலாற்றுவளர்ச்சியை, ஆளும்புறநிலை விதிகளை வெளிப்படுத்தி, முதலாளித்துவ உற்பத்தி முறையின் தவிர்க்கமுடியாத தோற்றம், வளர்ச்சி, அழிவு ஆகியவற்றை விளக்கி, பாட்டாளிவர்க்க புரட்சிகர யுத்த தந்திரம், தந்திரோபாயங்கள் பற்றிய கோட்பாடுகளை முன்வைத்தது. இருந்தும், இக் கோட்பாடுகளை ஒரு நாடு அதன் ஸ்தூலமான நடைமுறைக்கு இசைவாக பிரயோகிக்காவிட்டால், அது புரட்சியில் வாகை சூடமுடியாது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி அதன் நீண்டகால புரட்சி நடவடிக்கையில் சர்வ வியாபகமான மார்க்ஸிஸ கோட்

## 'தலைமைக் கட்சி' என்றோ 'ஆணையிடும் கட்சி' என்றோ இருக்க முடியாது!

பாடுகளை சீனாவின் உண்மையான நிலைமைகளுடன் இணைத்து, அதன் யதார்த்தங்களுக்கு பொருத்தமான யுத்த தந்திர, தந்திரோபாயங்களை வகுத்து, சகல விதமான வெளிநாட்டு தலையீடுகளையும் ஒழித்துக்கட்டி, புதிய ஜனநாயகப் புரட்சியில் மகோன்னத வெற்றியைப் பெற நாட்டு மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்கியது. அதைத் தொடர்ந்து சீனக் கட்சி அதே கோட்பாடுகளின் பிரகாரம் சோஷலிச புரட்சியையும் நிர்மாணத்தையும் கொண்டு நடத்தி, வெளிவிவகாரங்களிலும் முக்கியமான விளைவுகளைப் பெற்றது. ஜியாங் சிங் எதிர்ப் புரட்சி கும்பல் வீழ்ச்சி அடைந்தது முதல், குறிப்பாக 11வது கட்சி மத்திய கமிட்டியின் 3வது பிளீனம் முதல், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அந்நியத் தொடர்புகளில் லின் பியௌ, ஜியாங் சிங் எதிர்ப் புரட்சி கும்பல்களின் தலையீடுகளையும் சதிவேலைகளையும் பூரணமாக அம்பலப்படுத்தி விமர்சனம் செய்து, சர்வதேசிய பரிவர்த்தனைகளில் ஏற்பட்ட தவறுகளை சரி செய்துள்ளது, அதேவேளையில், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சில கம்யூனிஸ்ட் கட்சிகள் அந்நிய தலையீட்டை எதிர்க்கவும், தமது சுதந்திரத்தை பேணவும் நடத்திய போராட்டம் இடையீடின்றி வளர்ந்துள்ளது. இந்த கட்சிகள் இப்பொழுது சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவுகளை மீட்கவும் விருத்தி செய்யவும் விரும்புகின்றன.

இந்த புதிய சூழ்நிலையில் நம்முடன் நெருங்கிய உறவுகள் வைத்திருந்த கொரிய தொழிலாளர் கட்சியுடனும், ருமேனிய கட்சியுடனும், இதர கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவற்றுடனும் நேச உறவுகளை சுறுசுறுப்பாக விருத்தி செய்துள்ளோம். அத்துடன் புதிதாகத் தோன்றிய கம்யூனிஸ்ட் அரசியல் கட்சிகள், ஸ்தாபனங்களுடன் உறவுகளை ஏற்படுத்தியதோடு, இதர அந்நிய கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலாளிவர்க்க கட்சிகளுடனும் நேச உறவுகளை மீட்டெடுத்து, ஊக்கமாகவும் ஒழுங்கான முறையிலும் விருத்தி செய்துள்ளோம்.

1978ல் சீன, யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் ஒரு முன் நோக்கிய மனோபாவத்தை மேற்கொண்டு, உத்தியோகபூர்வமான முறையில் உறவுகளை மீட்டெடுத்துள்ளோம். அன்று முதல், இரு கட்சிகளினதும் உறவுகள் துரிதமாக அதிகரித்தன. ஒவ்வொன்றினதும் விஷேச நிலைமைகளுக்கு ஏற்ப சுதந்திரமாக சோஷலிஸ நிர்மாணத்தில் ஈடுபட்ட அனுபவங்களையும், சர்வதேச விவகாரங்கள் பற்றிய கருத்துக்களையும் அடிக்கடி பரிமாறி வந்துள்ளோம்.

1979ல் சீன கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவற்றுடனான உறவுகளை மீண்டுக்கொண்டது. 1980ல் நமது கட்சி இத்தாலி, ஸ்பானிய, கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் உறவுகளை அமைத்து அல்லது வளர்த்துக் கொண்டது.

சீன-இத்தாலி கட்சிகள் கடந்தகாலத்தில் ஏற்பட்ட சரி, பிழை சம்பந்தமான சர்ச்சைகளை ஒதுக்கி வைப்பதற்கு உடன்பாடு தெரிவித்தன. ஒவ்வொரு கட்சியும் சுதந்திரமானது. ஒரு முன் நோக்கிய உணர்வுடன் அவை மீண்டும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டன. இரு கட்சிகளுக்கும் பொதுவான அம்சங்கள் இருக்கும் அதேவேளையில், சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் கருத்து வேறுபாடுகளும் இருக்கின்றன. அத்துடன் தோழமையான பேச்சுவார்த்தைமூலம் அவை பூரணமாக கருத்துக்களைப் பரிமாறி பரஸ்பர விளக்கத்தை விரிவுபடுத்தி, தமது பாரம்பரிய நல்லுறவை வளர்க்கவேண்டும் என்பதையும் இருதரப்பும் ஏற்றுக்கொண்டன.

சீன—ஸ்பானிய கம்யூனிஸ்ட் கட்சிகளும் தமது எழுச்சிமிக்க ஐக்கியத்தை மீட்டுக்கொண்டதோடு, சுதந்திரம், பரஸ்பர மதிப்பு என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தமது பரஸ்பர ஒத்துழைப்பையும், ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த தொடர்ந்தும் முயற்சி எடுக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டன.

1982ல் சீன-பிரெஞ்சு கட்சிகளுக்கிடையே உறவுகளின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகியது. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எவ்வித ''தலைமைக் கேந்திரமோ'' அல்லது ''தந்தைக் கட்சியோ'' இருக்கக்கூடாது, ஒவ்வொரு கட்சியும் அதன் தேசிய குணாம்சங்களுக்கு மிகப் பொருத்தமான சோஷலிசப் பாதையை பின்பற்ற வேண்டுமே அன்றி, தயாராக உள்ள எந்த சோஷலிஸ 'மாதிரி''யையும் பிரதிபண்ணக் கூடாது, வேறுபாடுகளானவை இருதரப்பின் தோழமை பூர்வமான பரிவர்த்தனைகளுக்கும் ஒத்துழைப்புக்கும் தடைக்கல்லாகக்கூடாது என்று இருகட்சிகளும் ஒப்புக்கொண்டன.

இன்று சீன கம்யூனிஸ்ட் கட்சி ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா கண்டங்களின் இதர கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவற்றுடன் அதன் உறவுகளை மீட்டு, விருத்தி செய்கின்றது.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தது முதல் சர்வதேச அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாயின. உலக புரட்சியிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் புதிய நிலைமை உருவாகியுள்ளது. எனவே, உலக நாடுகளின் கம்யூனிஸ்டுகள் தத்துவத்திலும் நடைமுறையிலும் வரிசைக் கிரமமான புதிய பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கி உள்ளனர். அவர்கள் அனைவரும் வெளியிலிருந்து வரும் நிர்ப்பந்தங்கள் அனைத்தையும் உடைத்தெறியவும், புதிய சூழ்நிலைகளை ஆராய்வதற்கு மார்க்ஸிஸத்தை சுதந்திரமாக பிரயோகிக்கவும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் புதிய வழிமுறைகளையும், சாதனங்களையும் தேடிக் கண்டுபிடிக்கவும் உயர்ந்த திடசித்தமுடையவராய் இருக்கவேண்டும். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சுதந்திரம் நோக்கிய ஒரு புதிய ஓட்டமானது தோன்றி படிப்படியாக வளர்ந்து வருகின்றது. அது இன்றைய பிரதான ஓட்டமாகவும் உருவெடுத்துள்ளது. மென்மேலும் அதிகப்படியான கட்சிகள் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எந்தஒரு ''தலைமைக் கேந்திரமோ'' அல்லது ''தலைமைக் கட்சியோ'' இருக்கவில்லை. இருக்கமுடியாது என்று அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்று அனுபவம், ஒரு நாட்டின் புரட்சி நிர்மாணத்தின் சுதந்திரமான தீர்வு அந்தநாட்டு தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் அரசியல் கட்சியினதும் உரிமை மட்டுமல்ல, அந்நாட்டுப் புரட்சியானது வெற்றிகரமாக முன்னேறுவதற்கு உரிய முன் நிபந்தனையுமாகும்.

## சீனநிலைமைகளுக்கு ஏற்பவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிசத்தை பிரயோகித்தது

உலக நாடுகள் அவற்றின் சமூக பொருளாதார நிலைமைகளிலும் அபிவிருத்தியிலும், வர்க்க உறவுகளிலும், வர்க்க சக்திகளின் சமநிலையிலும், நாட்டு மக்களின் அரசியல் உணர்விலும் ஸ்தாபன அமைப்பிலும் வேறுபட்டு விளங்குவதால், அந்நாடுகளின் புரட்சியும் நிர்மாணமும் ஒரு நிலையான மாதிரியையோ அல்லது சூத்திரத்தையோ பின்பற்ற முடியாது. அதே போல ஒரு அந்நிய ''தலைமைக் கேந்திர''த்தால் வழி நடத்தப்படவும் முடியாது.

ஒரு தேசத்தின் நிலைமைகளுக்கும் குணாம்சங்களுக்கும் பொருத்தமான புரட்சி, நிர்மாணம் இவற்றின் வழிமுறை, யுத்ததந்திரம், தந்திரோபாயம், ஆகியவை அந்த தேசத்தின் பாட்டாளிவர்க்கத்தாலும் அதன் அரசியல் கட்சியாலும் தான் ஆராய்ந்து வகுக்கப்பட முடியும். ஒரு நாடு இன்னொரு நாட்டின் அனுபவங்களையும் வாய்ப்பாடுகளையும் யந்திரரீதியில் பின்பற்றமுடியாது. அன்றி, அதன் சொந்த அனுபவத்தையும் வாய்ப்பாட்டையும் இன்னொரு நாட்டின் மீது திணிக்கவும் கூடாது. புரட்சியை இறக்குமதிசெய்ய முடியாது. அதுபோல ஏற்றுமதி செய்யவும் முடியாது. ஒரு கட்சி இன்னொரு கட்சி சுதந்திரமாக இயங்குவதைத் தடுப்பதும், தனது கருத்துக்களை இன்னொன்றின் மீது திணிப்பதும், அல்லது அதன் உள் விவகாரங்களில் தலையிடுவதும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் நாடுகளில் புரட்சிலட்சியத்தை பின்னடைய அல்லது தோல்வியடைய செய்வதோடு சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் குழிபறித்துவிடும் என்பதை நடைமுறையானது மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது.

பாட்டாளி வர்க்க விடுதலை லட்சியம் என்பது குணாம்சத்தில் சர்வதேசிய தன்மை வாய்ந்திருப்பது உண்மை. எனவே சகல நாடுகளின் பாட்டாளிவர்க்கமும் பரஸ்பரம் ஆதரவும் உதவியும் அளித்து, அவற்றின் அனுபவங்களிலிருந்து பரஸ்பரம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கட்சியானது அதன் சுதந்திரத்தையும் சுய சார்பையும் பேணுகின்ற போதுதான் அந்த நாட்டின் புரட்சி அடிப்படையில் வெற்றியீட்டுகின்றது. ஒவ்வொரு நாட்டுப் புரட்சியின் வெற்றியும் அந்த நாட்டு நிலைமைகளின் முதிர்ச்சியிலும் அப் புரட்சியை வழிநடத்தும் கட்சியின் சரியான மார்க்கத்திலும், அந்த நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்கம், கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவற்றுக்கு நாட்டு மக்கள் வழங்கும் ஆதரவிலும் தங்கியுள்ளது.

லெனின் தலைமையிலான ரஷிய போல்ஷிவிக் கட்சி அன்றைய தேசிய, சர்வதேசிய நிலைமைகளின் பிரகாரம் முதலில் நகர்ப்புற ஆயுத கிளர்ச்சியையும் பின்னர் கிராமிய புரட்சியையும் நடத்துவதற்கான அதன் புரட்சி வேலைத்திட்டத்தை சுதந்திரமாக வகுத்துக்கொண்ட காரணத்தால்தான் அக்டோபர் புரட்சி வாகை சூடியது. இதுவே சரியான பாதை என்பதை சரித்திரம் நிரூபித்து விட்டது. இருந்தும், ரஷிய அனுபவத்தை சீனா கண்மூடித்தனமாக பின்பற்ற முடியாது.

> 1983 ஏப்ரல் மாதம் 17ம் இலக்க பெய்ஜிங் றிவ்யூ இதழில் ''வெளிநாட்டுக் கட்சிகளுடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறவுகள் பற்றியகோட்பாடுகள்'' என்ற தலைப்பில் வெளிவந்த இக் கட்டுரையை தலைப்பு, உபதலைப்பு மாற்றத்துடன் வெளியிடுகின்றோம். இக் கட்டுரையை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சரித்திரத்திற்கான சீன சங்கத்தின் உபதலைவர் லீசீ, அதன் உறுப்பினர் குவா ஒன்ஜி ஆகிய இருவரும் எழுதியுள்ளனர் [ஆர்- குழு]

தோழர் மா சே துங் பிரதிநிதித்துவப்படுத்திய சீன கம்யூனிஸ்டுகள், கடந்த கால புரட்சி அனுபவங்களை, அதன் சாதக, பாதக அம்சங்களை சுதந்திரமாக ஆராய்ந்து தொகுத்துக் கொண்டனர். சீனாவின் யதார்த்த நிலைமைகளின் பிரகாரம் நகர்ப்புறங்களை நாட்டுப்புறத்திலிருந்து சுற்றிவளைத்து, ஆயுத பலாத்காரத்தால் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் பாதையை அவர்கள் மேற்கொண்டனர். சீனப்புரட்சியின் வெற்றியும் அவர்கள் மேற்கொண்ட பாதை சரியானது என்பதை நிரூபித்துவிட்டது.

இந்த அம்சத்தைப் பொறுத்தவரையில், தோழர்

(5ம் பக்கம் பார்க்கவும்)

## ஒவ்வொரு நாட்டுக் கட்சியும் தமதுநாட்டு நிலைமைக்கேற்ப மாக்சிசத்தைப் பிரயோகிக்க வேண்டும்

# உலக கம்யூனிஸ்ட் கட்சிகளும்

## அதிகாரத்திலுள்ள கட்சிகள் அதிகாரத்தில்லாத கட்சிகளை அடக்க முற்படக்கூடாது

மா சே துங் மார்க்ஸிஸ லெனினிசியத்தை மேலும் செழுமைப்படுத்த முக்கியமான பங்களிப்புக்களைச் செய்துள்ளார். இருந்தும், ரஷிய மாதிரியை எவ்விதம் யந்திரீகரீதியில் பின்பற்றக்கூடாதோ, அவ்விதமே சீன அனுபவத்தையும் இதர நாடுகள் கண்மூடித்தனமாக பிரதி செய்யக்கூடாது. அவ்வாறு பிரதிசெய்யும்படி சீனாவும் கூறவில்லை.

சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சியின் வரலாற்று நடைமுறையும், கம்யூனிஸ்ட் அகிலம் கலைக்கப்பட்டதும், கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு எந்தவிதமான ''தலைமைக் கேந்திரமும்'' அல்லது தலைமைக்கட்சியும் தேவையில்லை என்பதைக் காட்டுகின்றன. சகல நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளும், அவை பெரிதாயினும் சரி சிறிதாயினும் சரி, இளையதென்றாலும் சரி, முதிர்ந்ததென்றாலும் சரி, அதிகாரத்தில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எல்லாம் சமமானவை. அவற்றை உயர்ந்தவை தாழ்ந்தவை என்றோ, தலைமை தாங்குபவை தலைமை தாங்கப்படுபவை என்றோ பிரித்துவிட முடியாது.

எந்த ஒரு கட்சிக்கும். அது எத்தனை நீண்டவரலாறு உடையதாயினும் சரி, எவ்வளவு முன்னதாக அதன் புரட்சி வெற்றிபெற்றாலும்

## சிறிய கட்சியானாலும் பெரிய கட்சியானாலும் சமத்துவமும் சுதந்திரமும் உடையனவே!

சரி, அல்லது அதன் அனுபவம் எவ்வளவு செழுமையானது என்றாலும் பரவாயில்லை, இதர கட்சிகளின் மேல் அது எவ்வித சலுகை அந்தஸ்தையும் பெற்றுவிட முடியாது.

ஒவ்வொரு நாட்டின் வரலாற்று வளர்ச்சியும் வேறுபட்டது. அதன் தொழிலாளர்களின் விழிப்புணர்ச்சியும் வேறுபட்டது. ஒவ்வொரு நாட்டு பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கமும் அதன்சொந்த வேறுபாட்டிற்கேற்ப விருத்தி அடைகின்றது. எனவே இந்த நாட்டின் பாட்டாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியும் அல்லது அந்த நாட்டின் பாட்டாளிவர்க்கமும் அதன் அரசியல் கட்சியும் ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ''முன்னணி''யில் நின்று ''முன்னோடிப் பாத்திரத்தை'' வகிக்கலாம்.

ஆனால் இந்த அந்தஸ்தானது, குறிப்பிட்ட நாட்டின் பாட்டாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியும், குறிப்பாக வெற்றி பெற்ற பாட்டாளிவர்க்கமும் அதன் அரசியல் கட்சியும், தாமே இதரநாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் அரசியல் கட்சிகளுக்கும் 'தலைமைக்கேந்திரம்' என எண்ணுவதற்கு அல்லது அவற்றை ஆதிக்கம் செலுத்துவதற்கு அல்லது ஆணையிடுவதற்கு, அல்லது அவற்றின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு வழி கோலிவிடக்கூடாது. அன்றி, புரட்சியில் முன்னதாக வெற்றியீட்டிய எந்த ஒரு கட்சியும் தான்தான் மார்க்ஸிஸம் லெனினிஸத்தின் ஏகபோக உரிமையாளன் என்றோ அல்லது ஒரு வியாக்கியானப்புலி என்றோ உரிமைகோரக்கூடாது. தனது நடைமுறைதான் ''சர்வவியாபகமான உண்மை'' அல்லது ''பொது விதி'' என்று விளம்பரம் செய்யக்கூடாது. தனது வழியைப் பின்பற்ற மறுக்கும் கட்சிகளை ''தொன்னூல்களிலிருந்து தூரம் செல்கின்றன'' என்றும, வைதீகத்துக்கு எதிராக கலகம் செய்கின்றன என்றும் குற்றஞ் சாட்டக்கூடாது.

சீன மக்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக தன்னைத்தானே தந்தைக் கட்சி என்று சுயபிரகடனம் செய்த கட்சியொன்றின் முயற்சிகளால் சீன கம்யூனிஸ்ட் கட்சி பாதிக்கப்பட்டது. ஆனால் இத்தகைய கட்டுப்பாட்டை எதிர்ப்பதன் மூலம் தான் சீன கட்சியின் வெளியுறவுக் கொள்கை வெற்றியீட்டியது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் அனைத்தும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று மதிக்க வேண்டும். சிறிதாயினும் சரி, பெரிதாயினும் சரி, அதிகாரத்தில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, எல்லாக் கட்சிகளுக்கும் பலவீன அம்சங்களும் பலமான அம்சங்களும் உண்டு. அவை பரஸ்பரம் கற்று. பிற கட்சிகளின் பலமான அம்சங்களைக் கொண்டு தமது பலவீன அம்சங்களை நீக்கி, அனைத்தும் ஒன்றாக முன்னேற வேண்டும். ஒரு கட்சியானது நீண்டகால வரலாற்றை உடையது என்ற காரணத்தால் அது சகல அம்சங்களிலும் சரியானது என்று சொல்லிவிட முடியாது. அன்றி, ஒரு கட்சி ஒரு சில பிரச்சினைகளைச் சரியாகத் தீர்த்த காரணத்தால், அக்கட்சி சர்வ விஷயங்களிலும் சரியானது என்றும் சொல்ல முடியாது.

பல்வேறு கட்சிகளும் பல்வேறு விதமான சூழ்நிலைகளை எதிர் நோக்குகின்றன. பல்வேறு அனுபவங்களையும் நோக்குகளையும் உடையவை. ஆகவே, சிக்கலான சர்வசதா மாறுகின்ற சூழ்நிலை பற்றியும் உலக சம்பவங்களின் ஆய்வு பற்றியும் பல்வேறு அபிப்பிராயங்கள் தோன்றுவது சர்வ சாதாரணமாகும். எல்லா கட்சிகளும் எல்லா விஷயங்கள்பற்றியும் ஒரே விதமான கருத்து உடையவையாய் இருக்கவேண்டும் என்று கருதுவது யதார்த்தத்துக்குப் புறம்பான ஒன்றாகும்.

உண்மையான அர்த்தத்தில் பார்த்தால், கட்சிகள் மத்தியில் தோன்றும் பலதரப்பட்ட கருத்துக்களும் மிகச் சிக்கலான சர்வதேச சம்பவங்களை ஒட்டுமொத்தமாக ஆராய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் நலம் பயப்பனவாய் உள்ளன. வேறுபட்ட சிக்கலான கருத்துக்களை ஆதாரங்களைக் கொண்டு உண்மையை காணுதல், கருத்துப் பரிமாறல். பரஸ்பர விளக்கத்தையும் நேசபூர்வமான பேச்சுவார்த்தைகளையும் வளர்த்தல் என்ற உணர்வின் அடிப்படையில் தீர்த்துக் கொள்ளவேண்டும். உடனடியாக எளிதில் தீர்க்கமுடியாத பிரச்சினைகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கட்சியும் நடைமுறை மூலம் ஒரு விடை காணும் வரை தமதுகருத்தை பேணிக் கொள்ளலாம்.

வேற்றுமைகள் ஏற்படும் போது ஏதோ 'வசதத்தை' எதிர்க்கிறார் என பிறர் மீது முத்திரை குத்துதல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவாது. மாறாக அது ஐக்கியத்துக்கே குழிபறித்துவிடும். இத்தகைய மனோபாவம் சிந்தனையைத் திருகிக்கொன்று, பிரச்சினையை ஆய்வதற்கு ஏற்ற சூழ்நிலையையும் சிருஷ்டிக்க மாட்டாது. எந்த ஒரு அந்நிய கட்சியையும் நாம் பகிரங்கமாக விமர்சனம் செய்யக்கூடாது. அதைவிட, ஒருசில கட்சிகளை ஒன்றுகூட்டி இன்னொரு கட்சியை அல்லது கட்சிகளை விமர்சிப்பதோ அல்லது நிராகரிப்பதோ இன்னும் மோசமானது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஒரு கட்சியின் தேசிய கொள்கைகளையும் மார்க்கத்தையும் அந்த நாட்டு மக்களே நடைமுறையில் பரீட்சித்து. தீர்ப்புவழங்க வேண்டும். எந்த ஒரு அந்நிய கட்சிக்கும் அதில் தலையிடுவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. நீண்டகாலப் போராட்டத்தின் போக்கில், எந்த ஒரு கட்சியும் சில தவறுகளை இழைப்பது தவிர்க்கமுடியாதது. ஒருகால் ஒருகட்சி தவறு செய்துவிட்டால், அக்கட்சியே அதை உணர்ந்து திருந்திக்கொள்ளவேண்டும். அதிலிருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்ளவேண்டும். இத்தகைய பிழையை பிற கட்சி ஒன்று விமர்சிப்பது, அவ்விமர்சனம் சரியாய் இருந்தாலும் கூட, விரும்பத்தக்க விளைவுகளைத் தரமுடியாது.

இருந்தும், ஒரு கட்சியும், அது தலைமைதாங்கும் அரசும் மேலாதிக்கவாதத்தை கடைப்பிடித்தால், இன்னொரு கட்சிக்கு கட்டளை இட்டு, அதை ஆட்டிப்படைத்து, கட்டுப்படுத்த முயன்றால் பிறகட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிட்டால், இதர நாடுகளில் கவிழ்ப்புவேலைகளில் ஈடுபட்டு, ஆக்கிரமிக்க முயன்றால் அத்தகைய நடவடிக்கைகள் பலமாகக் கண்டித்து, நிராகரிக்கப்படவேண்டும்.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் அங்குரார்பணம் செய்யப்பட்ட போது, மார்க்ஸும் எங்கெல்ஸும் உலகம் பூராவுமுள்ள புரட்சி இயக்கங்களின் சுதந்திரத்தையும் பூரண சமத்துவத்தையும் வலியுறுத்தினார்கள்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும், பாட்டாளிவர்க்கத்தின் விடுதலையானது அதன் சொந்த விவகாரம் எனக்கருதியதோடு பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திர உணர்வானது விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் அழுத்திக் கூறினார்கள். உலக பாட்டாளிவர்க்கமானது பொது லட்சியத்தையும் பொதுக் கடமைகளையும் உடையது. எனவே, உலக தொழிலாளர்கள் அனைவரும் தமது போராட்டத்தில் ஐக்கியப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

ஆனால். 'சர்வதேச ஒருமைப்பாடு என்பது தேசங்கள் மத்தியில் தான் நிலவ முடியும். எனவே, சர்வதேசியம் என்ற பதத்தில் தேசங்களின் வாழ்வு, சுய ஆதிபத்தியம், உள் விவகாரங்கள் சுதந்திரம் என்பவை ஏற்கெனவே அடங்கியுள்ளன. அதாவது சொன்னால், ஒவ்வொரு நாட்டுமக்களும் அல்லது தேசமும் தமது சொந்த பாட்டாளிவர்க்க போராட்டத்தை நடத்தவேண்டும்; ஒவ்வொரு நாடும் அதற்கே உரித்தான அரசியல், 'பொருளாதார நிலைமைகளை கொண்டுள்ளது. ஆகவே அந்த நாட்டின் சிறப்பியல்புகளுக்கு ஏற்ற தந்திரோபாயங்களை கடைப்பிடிப்பதின் மூலம் தான் அந்த நாட்டு மக்களை தட்டியெழுப்ப முடியும். அதன் புரட்சி. நிர்மாணம் இரண்டையும் சிறப்பாக செய்வதன் மூலம்தான் ஒரு நாடு அதன் சர்வதேசக் கடமையை நிறைவேற்ற முடியும்.

முதலாவது அகிலம் சம்பந்தமான தமது புரட்சி நடவடிக்கைகளிலும், பின்னர் தொழிலாளர் இயக்க உற்சாகிகளுடன் கொண்ட தமது தொடர்புகளிலும், மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும், ஒவ்வொரு நாட்டுப் புரட்சி இயக்கத்தையும் சுதந்திரமாக வளர்ப்பது ஒன்றன் உள்விவகாரங்களில் மற்றது தலையிடாமை என்ற கோட்பாடுகளுக்கு எப்பொழுதும் மதிப்புக் கொடுத்துவந்தார்கள்.

சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் பொது விதிகளிலும், தொழிலாளர் இயக்க உற்சாகிகளுடன் தாம் கொண்ட தொடர்புகளிலும் அவர்கள் சங்கம் என்பது 'ஒருமுகப்பட்ட நடவடிக்கை' 'தொடர்புக்கான ஒரு கேந்திரம்' என்று கருதினார்களே அன்றி, சர்வதேச 'பொது கவுன்சில் ஒரு பாப்பாண்டவரோ' அல்லது ஒரு ஆணைக் கேந்திரமோ அல்ல என்றும் தெரிவித்தார்கள்.

உண்மையான நிலைமைகளுக்கு இசைவான தந்திரோபாயமானது அந்நிகழ்ச்சிகளுடன் சம்மந்தப்பட்டவர்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும்என்றும் எங்கெல்ஸ் சுட்டிக்காட்டினார்.

தனித்தனி தொழிலாளர் ஸ்தாபனங்களினதும் அரசியல் கட்சிகளினதும் சுதந்திரத்தை வலியுறுத்திய மார்க்ஸும் எங்கெல்ஸும் ஒன்றின் உள் விவகாரங்களில் மற்றது தலையிடக்கூடாது என்பதை வற்புறுத்திக் கூறினார்கள். 1891ல் போலிஸ் தொழிலாளர் இயக்கத்தின் உற்சாகி வலேரி ரேபுலூஸ்கி தமது நாட்டுக் கட்சியில் ஒரு முரண்பாட்டை எதிர்த்துப் போரிடும்போது, தமது கட்சியில் எங்கெல்ஸை தலையிட்டு உதவுமாறு வேண்டினார். ஆனால், போலிஸ் கட்சியின் உள்விவகாரங்களில் தலையிட தமக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று அவர்வெளிப்படையாக தெரிவித்திருந்தார்

பாட்டாளி வர்க்கம் அதன் போராட்டத்தில் இறுதி வெற்றியைப் பெற சர்வதேச ஐக்கியமும் ஒத்துழைப்பும் அவசியம்; ஆனால் இவை சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று இருவரும் கருத்துத் தெரிவித்தனர்.

ஒவ்வொரு கட்டத்திலும் தொழிலாளர் இயக்கத்தின் 'முன்னணியில்' அல்லது தலைமையில் உள்ள தொழிலாளர் வர்க்கமும் அதன் அரசியல் கட்சியும் பெருந்தேச வெறி பிடித்தவையாய் இருக்கக் கூடாது; இன்னொரு நாட்டு தொழிலாளர் வர்க்கத்திற்கும் அதன் கட்சிக்கும் கட்டளையிடவோ தலைமை தாங்கவோ உரிமை இல்லை என்று இருவரும் கூறினர். அப்பொழுது சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் முன்னணியில் நின்ற பிரெஞ்சு தொழிலாளர் இயக்க உற்சாகிகள் சிலர் கடைப்பிடித்த பெருந்தேச வெறி மனோபாவத்தை சிறப்பாக இயக்கத்துக்கு தலைமை தாங்கும் 'பிறப்புரிமை' பிரான்சியருக்கே

7-ம் பக்கம் பார்க்க

## கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையிலான கருத்து முரண்பாடுகளை - பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கவேண்டும்!

**விமர்சனம்**

**கலை இலக்கிய அரங்கு**

# கோவிந்தன்: இன்னொரு நாய்க்கதை

**ஜெ**

'பஞ்சமர்' கோவிந்தன் ஆகிய நூல்களை எழுதியதன் மூலம் டானியல், அமெரிக்க நீக்ரோக்களிடம் வெள்ளை இனப்பெண்கள் சோரம் போன கதைகளை ஆயிரக் கணக்கில் எழுதிக் கறுப்பர் இன விடுதலை இயக்கத்தின் முன்னணி எழுத்தாளராகி விட்ட பொட்ஸ் மோக்கர் (PotSmoker) என்ற ஹிப்பி எழுத்தாளருடனும் (குறிப்பு-1) சராசரி ஜேர்மானியனின் உடலில் 83.7 சதவீத யூத இரத்தமே ஓடுகிறது என நிரூபித்துப் புகழ்பெற்ற பிரபல இஸ்ரேலிய எழுத்தாளரான நீற் ஸ்கொச்விஸ்கி (Neat Skochwiskii) (குறிப்பு-2) என்பவருடனும் வைத்துக் கருதவேண்டியவராகி விட்டார். தமிழ்நாட்டில் லட்சுமி காந்தன் (குறிப்பு-3) செய்ய முடியாததை நம் டானியல்

## டானியல் சாதியமைப்பை எதிர்க்கிறரா? அன்றி குறிப்பிட்டசாதியை எதிர்க்கிறரா?

சாதித்துவிட்டார் என்றால் மிகையாகாது. டானியலின் நாய்களை வைத்துப் படமெடுக்க சாண்டோ M. M. A. சின்னப்ப தேவர் இல்லையே என்ற குறை நெஞ்சை அழுத்துகிறது......'

மேற்கூறிய விதமாக எழுதுவதன் மூலமே எந்த விமர்சகனும் டானியல் முன்கூட்டியே (கோவிந்தன் முன்னுரையில்) வழங்கியுள்ள சாபங்களிலிருந்து தப்ப முடியும். இலக்கியம் என்றாலே என்னவென்று தெரியாமல் டானியலைப் புகழ்ந்துபாடக் கூலிக்கு மாரடிக்கும் கும்பலொன்று இருக்கிறது. இதற்கு மேல் டானியல் ஏன் இப்படி மிரட்டவேண்டுமோ!

வெகுஜன இயக்கங்களைக் கட்டிவளர்த்தவர், போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர் என்றெல்லாம் தன்னை அறிமுகப்படுத்துவித்தும் திருப்தி அடையாத டானியல் தான் ஒரு முதலாளி என்பதை மூடிக்கட்ட 'வெல்டிங், ரேணிங், ஷேப்பிங்' ஆகிய வேலைகளைச் 'செய்பவராக' தன்னை அழைப்பித்துள்ளார். 'சிறையில் இருக்கும் போது எழுதியது,' 'தலைமறைவாய் இருந்தபோது எழுதியது' போன்ற கதைகள் இன்று அவ்வளவு தூரம் எடுபடுவது இல்லை. காரணம் டானியலின் 'சிறை' 'தலைமறைவு' விஷயங்கள் ஏற்கனவே அம்பலப்பட்ட தொன்றே. எழுத்தாளர்களையும் விமாசகர்களையும் மூன்று வகையாகப் பிரித்துள்ள டானியல், (அவரது பகுப்பின் அடிப்படை அவருக்கே தெரியுமோ!) தன்னை 'மக்கள் எழுத்தாளனாக'க் காட்டிக் கொள்ள எவ்வளவுதான் முயன்றாலும், தானே முதலில் அடையாளங்காட்டிய 'தசை உணர்வு' எழுத்தாளன் தான் அவர் என்பது கதையை வாசிக்கத் தொடங்கியதும் தெளிவாகி விடுகிறது. எனவே அவரது மழுப்பல்களும் ('இந்த நாவலைப் படிக்கும்போது வழமைக்கும் அதிகமாக சிலர் முகம் சுழித்துக் கொள்வார்கள்') மிரட்டல்களும் ('கோவிந்தனை விமர்சிக்கப் புகுபவர்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் தங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும்' 'மெத்தப்படித்த சிலர்' 'சுராமப்புற மக்களை விட்டுத் தூரத் தூரப் போவது' ஆகியன) உருப்படியான விமர்சகர்களைப் பயமுறுத்த முடியாது. கிராமத்துத் தேவடியாள் 'என்னைப் பழிப்பவள் யாரும் பட்டணத்து வேசையாகத்தான் இருக்கமுடியும்' என்று பிரகடனம்செய்வதால் யாரும் அவளைக் கண்ணகி அம்மன் என்று கும்பிடப் போவதில்லை. அவளை உள்ளபடியே அடையாளங்காட்ட மறுப்பவர்கள் ஒரு சமயம் எதையோ மூடிக்கட்ட முனைபவர்களாக இருக்கக் கூடும்.

டானியலின் 'கோவிந்தனில்' ஒரு சராசரியான சிறுகதைக்குரிய அம்சம் மட்டுமே உள்ளது. சண்முகம் பிள்ளைக்குக் குழந்தை இல்லை. (இருந்து இறந்தது) அவர் வாழ்க்கை சாராயப்போத்தல் தயவுடன் நடக்கிறது. அவர் வளர்க்கும் 'உயர்சாதி' நாய் (கோவிந்தன்) அடுத்த வளவின் 'கீழ்ச் சாதிப்' பெட்டை நாயுடன் உறவு கொள்வதை அவர் வெறுக்கிறார். அதன் விளைவாக அவர் தன்நாயை அடிப்பதுடன் பெட்டைநாயையும் கொன்றுவிடுகிறார். அவரது நாய் அவரையே கடித்துக் கொன்றுவிடுகிறது. அதற்குள் அவர் அறியாமலே அவர் மனைவி கோந்தன் என்ற தாழ்த்தப்பட்டசாதியினன் ஒருவனுடன் சோரம் போகிறாள்.

இதை ஒரு நாவலாக்கும் பணியில் ஊரெல்லாம் உள்ள வேளாளப் பெண்கள் சோரப் போவதும், சம்பந்தா சம்பந்தமில்லாது சாதிப்பிரச்சனை தொடர்பான சம்பவங்களும் சேர்க்கப்படுகின்றன. வேளாளரது சாதித்தடிப்பை விமர்சிக்கும் டானியல், வேளாளச் செல்லத்துரை பிராமணப் பெண்ணைக் காதலித்த விஷயத்தில், தன் அனுதாபத்தை, அக் காதலை எதித்துப் பிராமணத் தங்கையை உதைத்துப்போடும் தமையனின் பிராமணச் சாதித்தடிப்பின் பக்கம் வைத்திருக்கிறது தெளிவாகிறது. டானியல் எதிர்ப்பது சாதி முறையினையா அல்லது ஒரு குறிப்பிட்ட சாதியையா என்ற கேள்வி எழுகிறது.

தாழ்ந்த சாதிக்காரர்கட்கு வெள்ளைக்கார அதிகாரி ஒருவன் நீதி வழங்கியதாகக் காட்டவும் வேண்டும், காட்டினாலும்சங்கடம் என்றநிலையில் டானியல் வெள்ளைக்காரனை யூத இனத்தவனாக்கி விடுகிறார். பிரித்தானிய அரசாங்கத் துறையில் இன்றும் யூத இனத்தவர்கள் அதிகம் இல்லை. அவர்களது அக்கறை வியாபாரம், வணிகம் போன்ற துறைகளில் தான் நீண்டகாலமாக இருந்துவந்தது. ஒரு காலனித்துவ நிர்வாகியின் நடத்தை சிலசமயம் நியாயமானதாக இருப்பதற்கு அவன் யூத இனத்தவனாக இருந்துதான் ஆகவேண்டுமா? 'தாழ்ந்தசாதி'ப் பொலிஸ்காரன் கருணாமூர்த்தி ஆகிவிடமாட்டான். தமிழ்ப் பொலிஸ்காரன் அரசாங்க அட்டூழியங்களை எதிர்ப்பவனாகி விடமாட்டான். டானியலின் சிந்தனை போகும் கோணல் திசையில் சகல விஷயங்கட்குமே சாதிச் சாயம் பூசப்பட்டுவிடும்.

காதல் ஒன்றும் தெய்வீகமானவிஷயம் இல்லை. ஆனாலும் அது சாக்கடைச் சேறும் இல்லை. மனித உணர்வு தொடர்பான தேவைகளை சமுதாய அமைப்பின் விகாரங்கள் தெளிவாகக் காணமுடியாமல் குழப்புகின்றன. இவற்றைத் தெளிவுடன் காண்பதற்கும் காட்டுவதற்கும் ஒரு மனப்பக்குவம் தேவை. டானியல் பேனாவில் பிறக்கும்போது உடலுறவு விஷயம் பெருமளவும் பெண்ணை ஆண் இழிவுசெய்யும் காரியமாகவே வருகிறது. நிலமான்ய சிந்தனையின் அசிங்கங்களில் இதுவும் ஒன்று. அண்ணாத்துரை, கருணாநிதி போன்றோர் சமூகக் கதை எழுதினால் பொதுவாக ஒரு தடவையாவது கற்பழித்தல் வராமல் போகாது. டானியலுக்கு என்னவோ கேவலத்துக்குரிய உடலுறவுகள் அரைடசினாவது இல்லாது போனால் திருப்தி இல்லை.

சாதி முரண்பாடுகளையும் அவற்றின் வர்க்க அடிப்படையையும் பற்றியோ நிலமான்ய சமுதாய உறவுகள் நவீன சமுதாயக் சூழலில் கண்டுள்ள சீரழிவுகளையும் விகாரங்களையும் பற்றியோ அறிய டானியலுக்கு அதிகம் நாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அவரளவில் கோவிந்தன் மூலம் யாரையோ பழிவாங்கிவிட்ட திருப்தியாக இருக்கலாம். பலியானது என்னவோ காகிதமும், அச்சடிக்கும் மையும், மனித உழைப்பும், மின்சாரமும் தான்!

இந்தப் புத்தகத்தில் எனக்குப்பிடித்த அம்சம் அட்டைப் படம். எளிமையான, நேர்த்தியான [illegible] வேலை; பயனுள்ள அம்சம்.........

'கோவிந்தா' என்றபதம் அத்தனையும் அநியாயமாக அழிந்து போய்விட்டது என்ற கருத்தில் (போட்ட பணம் கோவிந்தா,' 'கம்பனி கோவிந்தா') இந்தியாவில் பயன்படுகிறது. அந்தஅளவில் 'கோவிந்தன்' பொருத்தமான ஒரு தலைப்பு.

★

குறிப்புக்கள்:

1. இந்தப்பேரில் ஒரு எழுத்தாளரும் இல்லை.
2. குறிப்பு—1 பார்க்கவும்.
3. லட்சுமிகாந்தன் 1940 களில் வாழ்ந்த சினிமா மஞ்சள் பத்திரிகை ஆசிரியர். இவரது கொலை வழக்கில் N. S. கிருஷ்ணனும் தியாகராஜ பாகவதரும் கைதானார்கள். N. S. கிருஷ்ணனை நான் மிகவும் மதிக்கிறேன்.

# இரு போராட்டத் தோழரிடையே

சென்ற இதழ் தொடர்ச்சி...

### 4. ஹெங்யாங் குன்னில் "கவலையில்லாத இரட்டையர்"

எட்டாம் மார்க்கப் படையின் சொங்கிங் அலுவலகத்தில் அவை சங்கடமான ஆண்டுகள். ஜப்பானிய ஆக்கிரமிப் பாளர்களுக்கெதிரான போர்நடந்து கொண்டிருந்தது. இந்த அலுவலகத்தில் சௌ என் லாயும் டெங்யிங் சௌவும் பணிபுரிந்தனர். இங்கு வெளிப்படையான நடவடிக்கைகளுக்கும், தலைமறைவு நடவடிக்கைகளுக்குமிடையே பெரிய வாகுபாட்டைக் கட்சி விதித்திருந்தது. வெளிப்படை நடவடிக்கைகளுக்கு சொங்கிங்கில் இரு நிலையங்களைக் கட்சி அமைத்திருந்தது. ஒன்று ஹொங்யாங்குங்கில் அமைந்த எட்டாம் மார்க்க படையின் அலுவலகம். இதுவே கட்சியின் மத்திய குழுவின் அரசியல் பிரிவின் தென்சீனக் கிளையுமாகும். மற்றயது நகரின் மலைப்பகுதியில் செஞ்சியான்-10 ஆம் இலக்க சௌ இல்லம் ஆகும்.

சியாங்காய் ஷேக்கின் அடுத்தடுத்த பொதுவுடமை எதிர்ப்பு நடவடிக்கைகளால் சொங்கிங்கில் பொதுவுடமைக் கட்சியின் நிலை மோசமடைந்திருந்தது. ஹொங்யான்குன் அலுவலகம் கோமின்டாங் இராணுவப் பொலிசினாலும், உளவாளிகளாலும், சுழல்துப்பாக்கிகளாலும், காவல் முகாம்களாலும் சூழப்பட்டிருந்தது. மூன்று மாடிகளைக் கொண்ட 'சௌ இல்லத்தில்' இரண்டாம் மாடியிலும் மூன் வாசலில் ஓரு பகுதியிலும் கோமின்டாங்உளவுச் சேவையின் தலைவரான டாய்லியின் இருப்பிடம் இந்த இல்லத்திற்கு முன்புள்ள ஒழுங்கையிலுள்ளது. ஹொங்யாங்குங்கும் செஞ்சியானும் ஒன்றுக்கொன்று அருகாமையிலுள்ள இடங்களே. இரண்டிடங்களுக்கும் இடையே கொமிங்டாங் உளவாளிகளால் நிரப்பப்பட்டிருந்தது. எட்டாம் மார்க்கப்படை அலுவலகம் எப்போதுமே அவதானத்திற்குட்பட்டிருந்தது. தென் அன் ஹீய்ச் சம்பவத்திற்குப் பிறகு சொங்கிங்கில் கட்சியின் நிலை ஆபத்தை எதிர்நோக்கியிருந்தது. கொமிங்டாங் அரசின் கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடவேண்டிய நிர்ப்பந்தம் உற்சககட்டத்தை அடைந்தது. 'ஹொங்யாங் குன்னில் இறுதிமட்டும் நின்று இதனை நிலைநாட்டுங்கள்' என்று சௌ என் லாய் சகல தோழர்களுக்கும் ஆணையிட்டார். எந்நேரமும் சிறைப்படவும், உயிரை இழக்கவும் அனைவருமே தயாராயிருந்தனர்.

பயங்கர நிலை சூழ்ந்திருந்த சொங்குங்கிலிருந்த சௌ என் லாயும் டெங்யின் சௌவும் எதிரிகளை மிகவும்

(7-ம் பக்கம் பார்க்க)

# உன் மண்ணும் என் மண்ணும்

'என் மண், என் மண்' ணென்று எப்போதும் நீ சொல்வாய்
கோடேறி வழக்குரைப்பாய்.
மண்ணுக்கும் நீருக்கும் வேலி, மதிற்சுவர் எழுப்பி
வாராமல் நீ மறிப்பாய்.
இப்போதோ,
'இது நம் மண்' என்கின்றாய், 'எழுக' என ஆர்க்கின்றாய்.
நன்று. ஒரு சிறு கேள்வி.
நீ கூறும் 'நம் மண்' இது
ஆண்டோய்ந்த பரம்பரையார் மீண்டொருக்கால் ஆளவர
வேண்டிநமை வேள்வியிலே ஆடாகப் பலியிடவும்
அந்நியருக்கெல்லாமே அடமானம் வைத்திரந்து
அவர் தயவில் ஆளுதற்கு ஆசையுறும் மண்ணோமோ?
இல்லை யெனில்,
'விடுவிக்கப் படை கொணர்ந்த 'ரட்சகரின்' காலடியின்
விடுபடற்கு மறுபடியும் வெகுண்டெழுந்த காம்போஜம்.
ஆப்கனிஸ்தான் போல் ஒன்றோ? எல்சல்வடோர் போன்றோ?
பறிபோன பலஸ்தீன மண்போன்றோ?
மாறாக,
ஸியொனிஸத்தின் இஸ்ரேலோ? ஆபிரிக்கத் தென்முனையில்
வெள்ளை நிறவெறி உரிமை கொண்டாடும் மண்போன்றோ?
அடியடியாய் முடியாண்டோர் நீண்டநெடு வரலாற்றில்
குடும்பிப்பிடிச் சண்டைகளில் குருதியினாற் சேறான
செம்மண்ணோ, எம் மண்ணோ?
நீகூறும் மண் அதனை உழுபவனின் மண்ணென்றால்
அவனுக்கே சேரட்டும்.
முன்னாலே நிற்கின்ற ஆண்டைகளின் பங்கென்ன?

... சேகர்

# சிவனுலட்சுமணன் காட்டிய போராட்டப்பாதையில் அணிவகுப்போம்

'கடந்த ஐக்கிய முன்னணி அரசாங்கக் காலத்தை விட மிகமோசமான வழிகளில் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இனக்கலவரங்கள், காணிப்பங்கீடு, சம்பளவுயர்வுப் பாகுபாடு, பிரசாவுரிமைப்பிரச்சினை, கல்வி, வேலைவாய்ப்பு வீட்டுவசதிகள் போன்ற சகலவற்றிலும் தோட்டத் தொழிலாளர்கள் நிலை படுமோசமாகிக் கொண்டு போகின்றது.

இ. தொ. கா தொழிற்சங்கம் நடத்துவதாலோ அல்லது தொண்டமான் யூ. என். பி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து ஒும்மானம் அடிப்பதனாலோ, தோட்டத் தொழிலாளர்கட்கு விடிவு இல்லை என்பது வரலாறு காட்டியுள்ள உண்மையாகும். எனவே நமது சொந்தக்கால்களில் எழுந்துநின்று நமது சுயமரியாதையை நிலைநிறுத்தி நமது வர்க்கத்தின் சொந்த அரசியல் மார்க்கத்தை கட்டியெழுப்பி தோழர் சிவனு லட்சுமணன் காட்டிச் சென்ற போராட்டப் பாதையில் முன்செல்வோம்' இவ்வாறு இலங்கை தேசபக்த வாலிபர் இயக்க பூண்டுலோயா கிளையால் சீன்தோட்ட கோயில் மண்டபத்தில் 14-5-1983 அன்று நடாத்தப்பட்ட தியாகி சிவனு லட்சுமணனின் ஆறுவது ஆண்டு நினைவு கூட்டத்தில் உரையாற்றிய வாலிபர் இயக்கத்தின் மலையகக் கமிட்டியின் செயலாளர் தோழர் இ. தம்பையா குறிப்பிட்டார்,

ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் டெவன்

## நினைவு தினக் கூட்டத்தில் வாலிப இயக்கத் தோழர்கள்

தோட்ட காணிப்பங்கீட்டு போராட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தியாகி சிவனு லட்சுமணனின் மேற்படி ஆறுவது நினைவு கூட்டத்திற்கு தோழர் செல்வராஜ் தலைமை தாங்கினர்.

தொடர்ந்து மலையகப் பிரதேசக் கமிட்டியைச் சேர்ந்த தோழர் எஸ். ஜோன்சன் உரையாற்றும் போது அன்று சிவனு லட்சுமணன் நெஞ்சில் இருந்து பீறிட்டுப் பாய்ந்த இரத்தத்தின் சுவடு

(7-ம் பக்கம் பார்க்க)

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்

5ம் பக்கத் தொடர்

உரியதுஎன்ற மனோபாவத்தை எங்கெல்ஸ் மீண்டும் மீண்டும் கண்டித்தார்.

1893 ஜுன் 27ல் போல் லாபார்க் என்பவருக்கு எழுதிய கடிதத்தில், பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையை ஒரு பிரெஞ்சுக் கடமை ஆக்கும் பிரெஞ்சு உற்சாகிகளின் முயற்சி ஒருபோதும் சாத்தியமாகாது எனறும், இத்தகைய முயற்சி 'சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்கத்தை முடமாக்கிவிடும்' என்றும் குறிப்பிட்டார். ஒரு தேசமே இதர தேசங்களுக்கு எல்லாம் வழிகாட்டி என கோருவது காலாவதியாகிவிட்டகருத்து' என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

சர்வதேச இயக்கத்தின் கேந்திரத் தலைவர்களாக தம்மைக் கருதிய ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர்கள் சிலரின் செயல்களையும் சிந்தனைகளையும் கூட எங்கெல்ஸ் கண்டிப்புடன் விமர்சித்தார்.

1875ல் ஆகஸ்ட் பெபெல் என்பவருக்கு எழுதிய தமது கடிதத்தில், ஐரோப்பிய பாட்டாளிவர்க்கத்தின் சார்பில் பேசும் உரிமை ஜெர்மன் கட்சிக்கு இல்லை. சிறப்பாக, பொய்யானவற்றை கூறும் உரிமை அதற்கு இஞ்சித்தும் கிடையாது என்று எச்சரித்து அவர் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியை கண்டித்தார்.

1882ல் கார்ல் காட்ஸ்கிக்கு எழுதிய கடிதத்தில் அவர் விசேஷமாக சுட்டிக் காட்டியதாவது:- ''வெற்றி பெற்ற பாட்டாளிவர்க்கம், தமது விருப்பத்துக்கு சாத்தியமான சாதனங்களையே ஏனையோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் வெற்றி என்பது அசாத்தியம் என்று அந்நிய நாட்டு மக்களை நிர்பந்திக்கக்கூடாது.''

தமது பிற்காலத்தில் எங்கெல்ஸ், உழைப்பாளிவர்க்கக் கட்சிகள் பரஸ்பரம் ஒன்றை ஒன்று மதிக்க வேண்டும்; ஜனநாயக நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்; ஐக்கியத்தின் அடிப்படையில் கலந்தாலோசனை நடத்தவேண்டும் என்று குறிப்பாக வலியுறுத்தினந்தார். இதரநாட்டு சோஷலிஸ்டுகளுக்கு கட்டளையிட விரும்பும் மனப்பதிவை ஏற்படுத்தி தம்மை தவறான நிலையில் வைக்கக்கூடாது என்று பிரெஞ்சு சோஷலிஸ்டான லாபார்க்குக்கு அறிவுரை கூறினர். பிரெஞ்சு உற்சாகிகள் சர்வதேச நடவடிக்கைகளில் இதர கட்சிகளை மதித்து அவற்றுடன் கலந்தாலோசனை நடத்த வேண்டும் என்றும் அவர் பிரெஞ்சு உற்சாகிகளுக்கு புத்திமதி கூறினர்.

1889-ல் சர்வதேசதொழிலாளர் சம்மேளனத்தை கூட்டுவதற்கான தயாரிப்புகளின் போது, பிரெஞ்சுக்காரர் சம்மேளனத்துக்கான முன்முயற்சியை பெல்ஜியர்கள், சுவிஸ்காரர்களிடம் நன்ருக விட்டுவிடலாம்; உண்மையான வேலை-ஸ்தாபனமும் தயாரிப்பும்- அவர்களிடமே இருக்க வேண்டும். அதுவே போதுமானது என்று யோசனை கூறினர். இதற்கு மேற் சென்று பிரெஞ்சுக்காரர் செயற்பட விடவிரும்பினல், சம்மேளனம் கூடுவதே அசாத்தியமாய் விடும் என்றும் ஏங்கெல்ஸ் தெரிவித்தார்.

இரண்டாவது அகிலம் நிறுவப்பட்டபின், எங்கெல்ஸ் லாபார்க்குடன் நடத்திய கடிதத் தொடர்பில், ஒவ்வொரு சர்வதேச நடவடிக்கைக்கும் முன் நிபந்தனை யாதெனில் அதன் உருவமும் உள்ளடக்கமும் முன்னதாகவே எல்லாராலும் புரிந்து கொள்ளப்படவேண்டும் என்று பிரேஞ்சு பெருந்தேச வெறியருக்கு அடிக்கடி அறிவுறுத்தி வந்தார். முதலில் பிறகட்சிகளுடன் ஆலோசனை நடத்தாமல் பகிரங்க நடவடிக்கையில் இறங்கி விஷயத்தை குழப்பிவிடக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

சுதந்திரம், பூரண சமத்துவம், பரஸ்பர மதிப்பு, ஒன்றன் உள் விவகாரத்தில் மற்றது தலையிடாமை என்ற நமது கட்சியின் கோட்பாடுகளுக்கான சித்தாந்த அடிப்படை யாதெனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரின் வழிகாட்டலே ஆகும். கட்சிகள் மத்தியில் உறவுகளை விரிவாக்குவதற்குரிய சரியான கோட்பாடுகள் இவையே என்பதை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமும் நமது கட்சியின் நடைமுறையும் நிரூபித்துவிட்டன.

நீடித்த போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த சுதந்திர உரிமையை குறிப்பாக நாம பேணுகின்ருேம்; உலகின் இதர கட்சிகள் மக்களின் சுதந்திர உரிமையையும் நாம் மதிக்கின்ருேம் என்று நமது கட்சி மீண்டும் மீண்டும் பிரகடனம் செய்துள்ளது. நாம் மேலாதிக்கவாதத்தை அமுல் நடத்துவோரை எதிர்க்கின்ருேம்; அதே வேளையில் இன்ருயினும் சரி எதிர்காலத்திலாயினும் சரி நாங்களும் மேலாதிக்கவாதத்தினை நாடமாட்டோம்.

நமது 12வது காங்கிரஸால் முன்வைக்கப் பட்ட, இதர கட்சிகளுடன் உறவுகளை விருத்தி செய்வதற்கான கோட்பாடுகளின் பிரகாரம், எதிர்காலத்தில் நமது கட்சியுடன் நேச உறவுகளை ஸ்தாபிக்க விரும்பும் கம்யூனிஸ்ட் கட்சிகள், இதர தொழிலாளர் வர்க்கக் கட்சிகளுடன் நாம் விசாலமான. நெருங்கிய நேச ஒத்துழைப்பை ஸ்தாபித்து வளர்த்துவருவோம். இது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமும் மனித முன்னேற்ற லட்சியமும் வளர்ந்து செழிப்படைய உதவியாக இருப்பது நிச்சயம். ★

# இரு போராட்டத் தோழரிடையே

6-ம்பக்கத் தொடர்ச்சி

அமைதியாகவும், தந்திரமாகவும் சமாளித்து வந்தார்கள். எதிரிகள் அவர்களுடைய தயால்களுக்குள் குண்டுகளை வைத்தனுப்பி பயமுறுத்தினர் அவர்கள் இதனை உதாசீனம் செய்தார்கள். சகாக்களைப் போலவே இவர்களும் மாதமொன்றுக்கு 10 சீன டாலர்களுக்குள் தமது செலவை மட்டுப்படுத்தினர்கள். எல்லோரையும் போலவே இவர்களுக்கும் நாளொன்றுக்கு 0.3 அவுன்சு சமையல் எண்ணெயும், 0.5 அவுன்சு உப்பும் தரப்பட்டன. சிலசமயங்களில் சௌ என் லாய் இரண்டு அல்லது மூன்று மணி நேரம்மட்டுமே இரவில் உறங்குவார். அவருக்கு வேலைச் சுமை கூடியதால் உடல் நிறையில் பெருமளவு இழக்கலானர். நன்றிவரும் இவரது ஆரோக்கியத்தைக் கண்ட மக்கள் இவருக்கு வழங்கப்பட்டு வந்த உணவின் அளவை அதிகரிக்கவேண்டுமென விரும்பினர். 'முன்னணியில் நின்று போராடுகின்ற வீரர்கள் வெறும் பாணை மட்டுமே உண்டு கொண்டிருக்கிறர்கள். பின்னணியில் உள்ள நாம் கூடுதலான உணவை எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்''? என்று உணர்ச்சி வசப்பட்டுப் பதிலளித்தார். கணவனின் உடல் நிலை பாதிக்கப்படுவதைக் கண்டு வேதனைப்பட்ட போதிலும் அவருக்காகக் கூடுதலான உணவுப்படியை டெங்யிங் சௌ எப்பொழுதுமே கோரியதில்லை.

எட்டாம் மார்க்கப் படைத் தோழர்களோடு சௌ என் லாயும், டெங்யிங் சௌவும் பணிபுரிந்த போது நடந்துகொண்ட விதம், அனைவரின் வீர உணர்ச்சியைத் தட்டி யெழுப்பிலது. தங்களுடைய அலுவலக அறையை கோமின்டாங் ஆட்சியாளரிடமிருந்து விடுதலை பெற்ற பூமி என்றூர்கள். இவர்களோடு பணியாற்றி வந்த தோழர் றுங் காவோடாங் குவான் பிங் தம்பதிகளுக்கு 3 வயது மகனொருவனிருந்தான். இந்தக் குறும்புக்காரச் சிறுவனை சௌ என் லாயும், டெங்யிங் சௌவும் பெரிதும் விரும்பினர்கள். அவன் எப்பொழுதும் சிரிப்பான். எனவே சௌஎன்லாய் 'இவன் கவலையில்லா சமுத்தான்' என்பார். இதனைக் கேட்டுப் பழகிய தோழர்களும் அவனை 'கவலையில்லாக் குட்டியன்' என்றே அழைப்பர். அவனுக்கோ டெங்யிங் சௌவில் அளவு கடந்த பிரியம். அவன் அவரை 'கவலையில்லா அம்மா என்று செல்லமாகக் கூறுவான். சௌ என் லாய் அவரை 'கவலையில்லாப் பெரியது' என்று அழைப்பார். அலுவலகத்திற்கு வரும்போதெல்லாம் டெங்யிங் சௌவின் இடுப்பில் அவன் இருப்பான். ஒருநாள் தோழர் டெங்யிங் சௌ அவனை முத்தமிட்டுக்கொண்டிருக்கும் போது தோழர் சொங்சியாங் பெங் அவர்களைப் படமெடுத்தார். சௌ என் லாய் இப்படத்திற்குக் கீழே கவிதையொன்றைப் புனைந்து 'கவலையில்லா இரட்டையர்' என்று தலைப்புமிட்டார்.

சௌ என் லாயும், டெங்யிங் சௌவும் ஒவ்வொரு ஞாயிறுமையும் ஹொங்யாங்குனித்து வருவார்கள். சிலவேளைகளில் உணவு அருந்திச் செல்வார்கள் 'கவலையில்லா அப்பனோடு போய் விளையாடு' என்று கவலையில்லாக் குட்டியனுக்கு டெங் சௌ கூறுவர். சிறுவனும் சௌஎன் லாயிடம் ஓடிச்சென்று மடிமேலேறி கட்டித்தழுவி நையாண்டி செய்வான். சௌ என் லாயும் மகிழ்ச்சியில் திளைப்பார். சௌ என் லாயிற்கு குழந்தைகளில் அலாதிப்பிரியம். கவலையில்லாக் குட்டியன்மீது மட்டுமல்ல மற்றுத் தோழர்களின் குழந்தைகளையும் விரும்பினர். தமது களைப்பை எல்லாம் மறந்து அவர்களுக்குக் கதைகள் சொல்வதிலும், நகையாடுவதிலும் ஈடுபடுவார். இந்தச் சந்தர்ப்பங்கள் அவருக்குப் பெரிதும் ஆறுதலைத் தருகிறது என்பதை அறிந்த டெங் இந்த மருந்தை அவ்வப்போது ஏற்பாடு செய்வார் உண்மையிலேயே சௌ என் லாயும் டெங்யிங் சௌவும் கவலையில்லாத இரட்டையர்களே.

## 5. இடது கையால் எழுதிய கடிதம்.

1939 ஆண்டு கோடை காலத்தில் ஒரு நாள் மழை பெய்து ஓய்ந்தகாலம். யெனன் நகருக்கு வெளியே யாங்கே நதி பொங்கி வழிந்தது. வீதிகளெங்கும் சேறு படிந்திருந்தது. அந்த நேரம் சௌ என் லாய் யாங்சியாலிங் மத்திய கட்சிப் பாடசாலையில் பேசுவதற்கு குதிரைமீது ஏறி ஆற்றைக் கடந்துசெல்லும் வேளை இடறி விழுந்தபோது பாறைபோது மோதியகால் வலது கைஎலும்பு முறிந்தது. அவர் சிகிச்சை பெற்ற வைத்தியசாலை வசதிகள் மிகவும் குறைந்ததாகையால் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்ட போது கை முழுமையாக நீட்ட முடியாமல் இருந்தது. கட்சியின் மத்திய குழு அவரைச் சிகிச்சை பெற ரஷ்யாவிற்கு அனுப்பத் தீர்மானித்தது.

வலது கையால் எழுத முடியாதிருந்த போதிலும் சௌ என் லாய் தனது கடமைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். தாம்சொல்வதை எழுதுவதற்குத் தன் செயலாளரான சென் ஷீன் யாவின் உதவியைப் பெற்றூர். ரஷ்யாவிற்குப் புறப்படு முன் சொங்கிங்கிற்கு அனுப்ப வேண்டிய அநேக கடிதங்கள் இருந்தன. அனைத்தையும் செயலாளரின் உதவியோடு செய்துமுடித்தார். ஒரே ஒரு கடிதம் மட்டும் தன் கையால் (இடது கையால்) எழுதினர். அது அவர் டெங்யின் சௌவிற்கு எழுதியது.

சௌ என் லாய் ரஷ்யாவுக்குச் சிகிச்சை பெறச்செல்கிறூர் என அறிந்தவுடன் டெங்யின் சௌ கட்சித் தலைமைக் குழுவுடன் தந்திமூலம் தொடர்பு கொண்டு கணவனுடன் தாமும்செல்ல அனுமதி கோரினர். பிறருதவியின்றி சௌ என் லாய் ஒன்றும் செய்து கொள்ள முடியாத நிலையிலிருந்தபடியால் அவருடைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்பொழுது டெங் சொங்கிங்கில் இருந்தார். அவர் உடனடியாக யெனனிற்கு வர வேண்டும். சௌ என் லாய் அவரை உற்சாகமூட்டும் விதத்தில் கடிதமெழுதி உரிய நேரத்தில் வரவழைத்துப் பயணத்தை மேற்கொண்டார்.

(தொடரும்)

# கூட்டணியின்- இலட்சிய வேஷம் அம்பலம்

'அவதந்திரம் தனக்கு அந்தரம்' என்பது ஒரு பழமொழி. தமிழர் கூட்டணி தற்போது அந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பதவிகளுக்காகவும், உள்ளூராட்சிமன்றஅதிகாரங்களுக்காகவும் தமிழ் மக்கள் மத்தியில் இன உணர்ச்சியைக் கிளப்பி பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து வந்த தமிழர் கூட்டணித் தலைமை இன்று மிகவும் இக்கட்டான நிலைக்குள் சிக்குப்பட்டுள்ளது.

கடந்த ஆறுவருடங்களில் கூட்டணியின் முழு உருவத்தையும் தமிழ்மக்கள் நன்கு தெரிந்துகொண்டனர். அது யூ.என் பியுடன் நடந்து வரும் வர்க்க சல்லாபத்தை தமிழ் இளைஞர்கள் புரிந்துள்ளனர். அதாவது தமிழ்த் தலைமையின் வர்க்க நிலைப்பாடும் அதற்கான அவர்களது ஏமாற்று நடவடிக்கைகளும் இன்று போல் என்றுமே அம்பலமாகியது கிடையாது.

அமிரும் அவரது கூட்டாளிகளும் யூ. என். பிக்கு முண்டு கொடுத்துவரும் இவ்வேளை தமிழ் மக்கள் யூ. என். பிக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல் தமிழர் கூட்டணியினரையும் தமிழ் மக்கள் நிராகரித்தும் வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணியின் யூ. என். பி ஆதரவு நடவடிக்கையை எதிர்த்து தமிழ்மக்கள் யூ. என். பிக்கு எதிராக வாக்களித்தனர். சர்வசன வாக்களிப்பிலும் அவ்வாறே! இப்பொழுது நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில வடக்கே கூட்டணியின் முகத்தில் தமிழ் மக்கள் கரியைப் பூசிவிட்டனர்; வடக்கில் மொத்தம் 98,862 வாக்காளர்களில் 11,860 பேர் மட்டுமே வாக்களித்தனர். இது கூட கூட்டணியின் பெருந்தொகைப் பணச்செலவாலும், வேறும்பல குறுக்கு வழிகளாலும பெறப்பட்டது என்றே பரவலாக மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

தமிழர் கூட்டணித் தலைமை இன்று தமிழ் மக்களுக்கு சரியான பதிலையோ அன்றி பாதையையோ காட்ட முடியாத அவல நிலைக்கு வந்துள்ளது. தாம் வடக்குதியில் ''கைப்பற்றிய'' பதவிகளைப் பொறுப்பேற்க முடியாத நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். பல நாள் கள்வன் ஒருநாள் பிடிபடவே செய்வான். அந்தநிலைக்கு அரசியல் ஏமாற்றில் ஈடுபட்டுவந்த கூட்டணி இன்று வந்துள்ளது.

## வாலிபர் இயக்க மலையக கமிட்டியின் விரிவு படுத்தப்பட்ட கூட்டம்

தேசபக்த வாலிபர் இயக்க (மலையகக் கமிட்டியின்) முதலாவது மாநாட்டில் இரண்டாவது விரிவுபடுத்தப்பட்ட வேலைத்திட்டக் கூட்டம் அட்டன் செட்டிக் மண்டபத்தில் 29-5-83 அன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4-30 வரை நடைபெற்றது.

தோழர் இ. தம்பையா தலைமைக்குழு சார்பாகக் கூட்டத்தை தொடக்கிவைத்து ஆரம்ப உரை நிகழ்த்தினார். தொடர்ந்து அரசியல் மார்க்க, ஸ்தாபன அமைப்பு, வெகு ஜனவேலை, தேசிய கலைஇலக்கியப் பேரவை அறிக்கைகள் தனித்தனியே சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. தொழிலாளர்கள்—ஆசிரியர்—மாணவர் — புத்திஜீவிகள் ஆகிய பலதரப்பட்டோரும் விவாதங்களில் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். அறிக்கைகள், தீர்மானங்கள் விவாதங்களின் பின் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## 1-ம்பக்கத் தொடர் பேராதனையில் நடந்ததென்ன?

பட்டன. சில தமிழ் விரிவுரையாளர்கள் மிரட்டலுக்குள்ளாயினர்.

எந்திரவியற் பீடச் சிங்கள மாணவர்கள் ஏகோபித்த முறையில் பல்கலைக்கழகத்தை உடனடியாக மூடும் படியும். உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரையும் எல்லா மாணவர்களும் திரும்பிவரக்கூடிய சூழ்நிலை ஏற்படும் வரையும் விரிவுரைகளுக்குப் போவதில்லை எனவும் முடிவுசெய்தனர். இவ்விஷயம் நிர்வாகிகட்குத் தெரியப்படுத்தப்பட்டது. ஆயினும் பல பீட அதிபர்களதும் மாணவர் சங்கத் தலைமையினதும் ஆலோசனைகளும் புறக்கணிக்கப்பட்டு வளாகம் இதுவரை மூடப்படவில்லை. பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவு தன்னால் எதுவித பாதுகாப்பும் தரமுடியாது என்பதைத் தெளிவுபடுத்திவிட்டது. பொலிசார் மூலம் காடைத்தனத்தைத் தடுக்கும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இச் சூழலில் இக்கலவரம் நிகழ்வதையிட்டு அரசாங்கமும் நிர்வாகமும் அதிகம் கவலைப்பட விலலை என்பதுடன் அரசாங்கம் இந்நிலை தொடர்வதையே விரும்புகிறது என்பதும் தெளிவாகியுள்ளது. இதனை ஆரம்பித்த விஷமிகள் யாருடைய அனுசரணையுடன் ஆரம்பித்தார்கள் என்பதில் கருத்து வேறுபாடு குறைந்துவருகிறது எதிர்க்கட்சியினர் மீது பழி சுமத்த நிர்வாக ஆதரவாளர்கள் எடுத்த முயற்சிகள் தோல்விகண்டன. தாக்குதலில் முன்வரிசையில் நின்றவர்கள் விஞ்ஞான பீடமாணவர்கள் என்பதும் இவர்கள் நடுவே யூ. என். பி. யினரும் ஜே. வி. பி. யினரும் காணப்பட்டதாக தமிழ் மாணவர்கள் குறிப்பிட்டதும் ஓரிரு குறிப்பிட்ட விடுதிகளிலேயே இவர்களிற் பலர் வதித்துவந்ததும் குறிப்பிடற்குரியது. கலைப்பீட மாணவர்களும், மருத்துவபீட மாணவர்களும் இதில் பங்கு பற்றவில்லை என்ற கருத்தும் பரவலாக நிலவுகிறது. எந்திரவியற்பீட சிங்கள மாணவர்கள் துணிவாக இந்த இழி செயல்களை எதிர்த்தனர் என்பதும் கவனிக்கவேண்டியது.

இதைத் தூண்டியவர்களது நோக்கங்கள் என்ன என்பது முக்கியமான விஷயம் கடந்த காலததில் விமலராசா கைதானவிஷயம், பல்கலைக்சழகத்தில் தனியார் கல்வி போன்ற பிரச்சனைகளில் மாணவர் ஐக்கியம் ஏற்படுத்திய தாக்கம் அரசாங்கத்தின் முகத்தில் கரி பூசியது பற்றி நாம் மறப்பதற்கில்லை. துணைத்தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள், யாழ்ப்பாணத்தில் யூ. என். பி வேட்பாளர்கள் சுடுபட்டது, எதிர்வரும் பொருளாதார நெருக்கடி என்பனவும் முக்கியமான விஷயங்கள்.

எதிர்வரவுள்ள சர்வாதிகார ஆட்சிக்கு மாணவர்களின் ஐக்கியம் ஒரு சாபக்கேடாகவே இருக்கும். அரசியல்ரீதியான பிளவுகளை நம்ப முடியாத நிலையில் இனரீதியான பிளவுகள் கூட நம்பகமானவை. இதற்குச் சிலபேர் பலியானதால் ஒன்றும் அவர்கட்கு நட்டமில்லை அரசாங்கச்சார்பு பத்திரிகைகள் தமிழ்மாணவர்கள் மீது பழிபோடமுனையும் அதே சமயம் சுதந்திரன் செய்திகளை அவசர அவசரமாகத் திரித்தும் சிங்கள மாணவர்கள் அனைவரையுமே கெட்டவர்கள் என்று எண்ணும் படியும் செய்திகளைப் பிரசுரித்துள்ளது. இனவெறுப்பை இருதரப்பிலும உள்ள பிற்போக்கு சக்திகள் ஊக்குவிக்கின்றனர். இது நீண்டகால வரலாறு.

எந்திரவியற்பீட சிங்கள மாணவர்களது முயற்சிகள் மெல்லமெல்ல ஆதரவுபெற்று வருகின்றன. இவை எதிர்காலம் பற்றி நம்பிக்கைதரும் விஷயங்கள். ஆயினும் நிலவரத்தை முற்றாகக் கட்டுப்படுத்தவும், விஷமிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவும் இத்தகைய சம்பவங்கள் மீண்டும நிகழாது தடுக்கவும் உடனடியாகவே' நடவடிக்கைகள் எடுக்குமாறும் வழமைபோல் விஷயங்களைப் பூசி மழுப்பாமல் உண்மைகளை மதிக்கவும் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது சகல முற்போக்கு தேசபக்த சக்திகளதும் கடமையாகும். பேராதனை வளாகத்தின் வரலாற்றில் நிகழ்ந்த முதலாவது இனக்கலவரம் இதுவே. இதுவே இறுதியானதாகவும் இருக்கட்டும்.

கொழும்பு மருத்துவக் கல்லூரியின் விடுதியிலும் இனவாத வன்முறை 20/5 வெள்ளி இரவு நடந்துள்ளன பேராதனைச் சம்பவங்கள் பற்றி அரசினதும் பல்கலைக்கழ நிர்வாகத்தினதும் அசமந்தமான போக்கே இதைச் சாத்தியமாக்கியுள்ளது. அரசாங்கம் இந்த விதமான இழி செயல்களை ஆதரித்துத் தூண்டிவிடுகிறது என்ற அபிப்பிராயம் மாணவரிடையே பரவலாக நிலவுகிறது. விஷமிகள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயனபடுத்தாமல வேறென்ன செய்வார்கள்.

## 1-ம்பக்கத் தொடர்... தமிழ் மக்களின்

யாது என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

அண்மையில் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும பேசிய பல அரசதரப்புத் தலைவர்கள் வடக்கின் நிலைமைகளுக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்று பேசி இருக்கிறார்கள். இது அவர்களின் உண்மையான உள்ளக்கிடக்கையா அல்லது ஒரு சமாளிப்பா என்ற ஐயப்பாடு எழுகிறது. ஏனெனல் ஜனாதிபது பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவேன் என்று சபதம் எடுக்கும் பேச்சுத்தொனிக்கும் அரசியல் தீர்வு என்ற ஏனையவர்களின் பேச்சுத் தொனிக்கும் இடையில் நிறைய வித்தியாசம் இருப்பதையே காண முடிகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்ற குரல் இன்று சகல அரசியல் கட்சிகளாலும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாகத தென் இலங்கை மக்கள் மத்தியில் இக்குரலுக்கு ஆதரவு வலுப்பெற்று வருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும், அவற்றுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதை இந்நாட்டு ஜனநாயக, தேசபக்த, முற்போக்கு சக்திகள் நீண்டகாலமாக வற்புறுத்தி வந்துள்ளன. ஆனல் பாராளுமன்ற அதிகார வேட்டைக்கு இனப்பிரச்சினை நல்ல காடாக அமைந்துள்ளதால் அதைத் தீர்த்து வைக்கஉருவாகிய பல நல்ல சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டன. இதற்கு ஒரு பக்கம் மட்டுமன்றி இருபக்கத்திலும் இருந்த முதலாளித்துவத் தலைவர்கள் காரணமாகினர் என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் உணருகின்றனர்.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குறைந்த பட்சத்தீர்வும், அன்றி கூடிய பட்சத்தீர்வு என்பது யூ. என் பி-தமிழர் கூட்டணி ஆகிய இரண்டு கட்சிகளிடம் மட்டும் எதிர்பார்க்க முடியாது. அது சகல கட்சியினரினதும் முன் முயற்சியாலும் சரியான அணுகுமுறையாலும் தீர்க்கப்படவேண்டிய அவசியமான ஒரு தேசியப் பிரச்சினையாகி விட்டது.

கடந்த ஆறுவருடங்களாக அரசு — கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் எதுவித பலாபலன்களையும் அளிக்கத் தவறிவிட்டன. அவ்விரு பகுதியினரும் தமதுவர்க்கத் தேவைகளையும், அபிலாஷைகளையும் அடைந்தார்களே அன்றி தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை. ஆதலினாலேயே இன்று யூ. என். பியையும் அதன் தமிழ் சகாவான தமிழர் கூட்டணியையும் தமிழ்மக்கள் நிராகரித்துள்ளனர்.

இந்நிலையில் தமிழர் பிரச்சினை பற்றி ஆராய்ந்து முடிந்தளவுக்கு தீர்வை முன்வைப்பதற்கு சர்வகட்சிகளையும் அழைக்க அரசு முன்வந்தால் ஓரளவு இது சாத்தியமாகும். ஆனல் யூ. என். பி அரசுக்கு இத்தகைய ஒரு தேசியதேவை உடன்பாடானதா என்ற கேள்வியே மேலோங்கி நிற்கிறது. தேசத்தின் பொருளாதாரத்தை, அரசியலை, கலாச்சாரத்தை முற்று முழுதாகவே விதேசியமயப்படுத்தி நாட்டை நவகாலனித்துவத்தின் காலடியில் நசுக்கவைத்து வரும் யூ. என். பிக்கு அதன் தலைவர்களுக்கு இனப் பிரச்சினை ஒரு கருவியாகப் பயன்படும் வரை அப்பிரச்சினையில் சிறு அளவுதானும் குறைக்கப்படுவது சங்கடத்தையே ஏற்படுத்தும்.

இந்த நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்களும் அவர்கள் மத்தியில் உள்ள உண்மையான ஜனநாயக தேசபத்த சக்திகளும் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை பரிகாரம் அல்ல என்பதையும் நியாயமான அரசியல் தீர்வே தேவை என்பதையும் வற்புறுத்தும் மாபெரும் இயக்கம் நடத்தவேண்டும்.

### கந்தர்மடம்.........

1-ம் பக்கத் தொடர்

பட்ட வீடுகளின் எண்ணிக்கை மாத்திரம் 129 ஆகும்.

ஆனல் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் ஆங்காங்கே தாக்கப்பட்டனர் அன்று இரவு விபரம் அறியப் படாத சூட்டுக்காயங்களுடன் ஒரு சாதாரண இளைஞனின் சடலம் ராணுவத்தால் யாழ் பெரியாஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. காயமடைந்த பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மனித இதயம் படைத்த எந்த மனிதனும் கந்தர்மடத்தில் நடத்தப்பட்ட ராணுவ வெறியாட்டத்திற்கு கண்டனம் தெரிவிக்காது விடமுடியாது. உடமைகள் இழப்புக்கும் மனத்தவிப்பிற்கும் ஆளாகி உள்ள அப்பகுதி மக்களுக்கு செம்பதாகை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

### அமெரிக்க ஆலோசனை

3-ம் பக்கத் தொடர்

மக்களின் மீது யூ. என். பி. குதிரைச்சவாரி விடலாம் என நம்புகின்றது. எனவே கூட்டணியை நிராகரித்து யூ. என்.பி.எதிர்ப்பு தேசியஓட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டு தமிழ்மக்கள் முன் செல்வதே சரியான ஒரு நிலைப்பாடாகும் என்றும் கூறினர்.

இக்கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர்கள் எச். ஜி. எஸ். ரத்தினவீரா, பொன். குமாரசுவாமி, எஸ். விஜயானந்தன், ஆகியோரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பில் திருவாளர்கள் லை இராசசுந்தரம், எஸ் சிவஞானம் ஆகியோரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது)சார்பில தோழர் எஸ். தேவராஜா, லை. [illegible]ன்னியசிங்கம ஆகியோரும் உரையாற்றினர். கூட்டத்தில் பெண்களும் உட்பட பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

### சிவனு லட்சுமணன்...

7-ம் பக்கத் தொடர்

களை யார்தான் மறந்தாலும் அடிமைத் தளைகளை அறுத்தெறிய உறுதி பூண்டுள்ள எமது இயக்கமும் மக்களும் மறந்து விடப்போவதில்லை என்று கூறினர். மேலும் மலையகக்கமிட்டியின் சார்பில் தோழர் என். சத்திவேலும் பூண்டுலோயா வாலிபர் இயக்க கிளை தோழர்களான ஞானசேகரன், ராஜேந்திரன், சுப்பிரமணியம், வீரபுத்திரன் ஆகியோரும் மற்றும் இயக்க தோழர்கள் பலரும் உரையாற்றினர்கள்.

15-5-83 அன்று தலவாக்கெல்லை பெயர்வெல் தோட்ட கோயில் மைதானத்தில் தோழர் ஐ. குமாரவேல் தலைமையில் சிவனுலட்சுமணனின் நினைவுக்கூட்டம் நடைபெற்றது இக் கூட்டத்தில் உரையாற்றிய மலையகப் பிரதேசக்கமிட்டியைச் சார்ந்த தோழர் கே. சதாசிவம் அன்று சிவனு லட்சுமணன் இறந்தபோது, அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினோம். அன்று எம்மிடம் ஒரு சரியான கொள்கை இருக்கவில்லை, இன்று எம்மிடம் சரியான கொள்கையும் எம்மை வழிநடத்த இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கமும் உண்டு என்றுகுறிப்பிட்டார்.

மேலும் தோழர்கள் இ. தம்பையா, எஸ். ஜோன்சன், நடேசன், நடராஜ் கணேசன், தேவதாசன் ஆகியோர் உட்பட பல தோழர்கள் உரையாற்றினர்கள்.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நடராஜதினம் 15/1 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.